# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTRE

வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 249 சனி, ஆகஸ்ட் 26, 2023 17 பக்கங்கள்





## சந்திராயன் சரித்திரப் பயணம் வெற்றி

தமிழரின் அறிவுப்பங்களிப்புடன் சந்திராயன் சந்திரனின் தென்பகுதியில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது.



## பிரிகோசினின் மரணம் ஏற்படுத்திய சந்தேகங்கள்

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

## இஸ்ரேலிய விடுதலைப்பயணத்தை முன்னிறுத்தி

### ஈழமக்கள் தமது புனித விடுதலைப்பயணத்தை உலக மக்களுக்கு வெளிப்படுத்திய வரலாற்று நிகழ்வு

—— பங்கேற்பாளரான மூத்த அரசியல் ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன்

# தமிழ்த்தன்மையை இழந்து வரும் தமிழர் நகரம்

முனைவர் ஸ்ரீஞானேஸ்வரனுடனான நேர்காணல்

# வலுக்கும் இலங்கை – இந்திய மோதல் – பாதுகாப்பு அமைச்சர் வருகை



இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் எதிர்வரும் மாதம் முதல் வாரத்தில் இலங்கை வரவுள்ளதாக இந்திய அரச தகவல்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை வரும் அமைச்சர் திருகோணமலை சென்று இந்திய அரசின் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் இரு நாடுகளுக்கு இடையிலான எரி வாயு குழாய்கள் அமைக்கும் திட்டம் போன்றவற்றை பார்வையிடவுள்ளார்.

எதிர்வரும் மாதம் 2 ஆம் நாள் இலங்கை வரும் சிங் இலங்கை அரச தலைவர் மற்றும் அவரின் பிரதம அதிகாரி சாகல ரத்னாயக்கா ஆகியோரை சந்திக்க திட்டமிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையில் தரைவழி பாலம் அமைப்பது மற்றும் மின்சக்தி பரிமாற்றம் தொடர்பான உடன்பாடுகள் எட்டப்பட்ட பின்னர் சிங் வருவது முக்கியமானது என்பதுடன், சீனாவின் சி ஜான்-6 என்ற ஆய்வுக்கப்பல்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# இலங்கையில் அதிகரிக்கும் துப்பாக்கி சூட்டு மரணங்கள்

இலங்கையில் துப்பாக்கி பிரயோக சம்பவங்கள் அதிகரித்து வருவதால் அங்கு சட்டம் ஒழுங்கு முற்றாக சீர்குலையக் கூடிய சாத்தியங்கள் எற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை (24) மன்னார் மாவட்டத்தின் அடம்பன் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர். உந்துருளியில் வந்தவர்கள் மீதே துப்பாக்கி சூடு நிகழ்த்தப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர்கள் உலியன்குளம்



மற்றும் பள்ளிமடுவை சேர்ந்த 46 மற்றும் 53 வயதானவர்கள் என இலங்கை காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். கடந்த 21 ஆம் நாளும் இரத்மலானை பகுதியில் ஒருவர்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# மத்திய அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பில் இருந்து தாய்வான் வெளியேற்றம்

பார்லசன் என்ற மத்திய அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பில் இதுவரைகாலமும் பார்வையாளர் தரத்தில் இருந்த தாய்வான் தற்போது அதில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

தாய்வானை வெளியேற்றுவதற்கான வாக்கெடுப்பை மத்திய அமெரிக்க நாடுகளின் பாராளுமன்றம் அண்மையில் மேற்கொண்ட பின்னர் இந்த நடவடிக்



கையை எடுத்துள்ளது. 1999 ஆம் ஆண்டு முதல் தாய்வான் பார்வையாளர் தரத்தில் இருந்தபோதும்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணையும் ஆறு நாடுகள்




சவுதி அரேபியா, ஈரான் உட்பட ஆறு நாடுகள் பிரிக்ஸ் கூட்டமைப்பில் அடுத்த ஆண்டு புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக தென்னாபிரிக்காவின் அரச தலைவர் சிறில் ராமபோசா தெரிவித்துள்ளார்.

தென்னபிரிக்காவில் இடம்பெற்ற பிரிக்ஸ் கூட்டமைப்பின் கூட்டத்தொடரின் இறுதி நாளான கடந்த வியாழக்கிழமை(24) அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

உலகில் மிகப்பெரும் பொருளாதார நாடுகளான சீனா, பிரேசில், இந்தியா, ரஸ்யா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளை கொண்டுள்ள பிரிக்ஸ் கூட்டமைப்பு மேற்குலகத்தின் ஜி-7 பொருளாதார கூட்டமைப்புக்கு

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# வக்னர் குழுவின் தலைவர், கட்டளை அதிகாரி ஆகியோர் பலி



கடந்த வருடம் ஜூன் மாதம் ரஸ்யாவில் இராணுவப் புரட்சி ஒன்றை மேற்கொள்ள முயற்சித்ததாக குற்றம் சுமத்தப்பட்ட வக்னர் குழு என்ற கூலிப்படையினரின் தலைவர் ஜெவ்ஜெனி பிரிகோசன் கடந்த புதன்கிழமை (23) ரஸ்யாவில் இடம்பெற்ற விமான விபத்தில் கொல்லப்பட்டுள்ளதாக ரஸ்ய தகவல்கள் தெரிவித்துள்ளன.

தலைநகர் மொஸ்கோவில் இருந்து சென் பீற்றேஸ்பேர்க்கிற்கு பயணம் மேற்கொண்ட வக்னர் குழுவின் தலைவருக்கு செந்தமான விமானமே விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்த 3 விமானிகளும், பிரிகோசனுடன் பயணம் மேற்கொண்ட 6 பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் வகனர் குழுவின் பிரதம கட்டளை அதிகாரி டிமிற்றி யுறிகினும் கொல்லப்பட்டுள்ளார். விமான விபத்துக்கான காரணம் என்ன என்பது குறித்து தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக ரஸ்யா தெரிவித்துள்ளது. எனினும் விமானத்தின் தரையிறங்கும் சாதனத்தில் (லன்டிங் கியர்) குண்டு வெடிப்பு ஒன்று நிகழ்ந்ததால் விமானத்தின் ஒரு இறக்கை துண்டாடப்பட்ட நிலையில் விமானம் வீழ்ந்து நொருங்கியதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

பக்மன்ட் களமுனையில் மிகவும் சிறப்பாக செயற்பட்ட வக்னர் குழு பின்னர் ஜூன் மாதம் ரஸ்யாவின் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக மேற்கொண்ட இராணுவப் புரட்சியினால் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியிருந்தது. அதனை தொடர்ந்து ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டீனுக்கும் வகனர் குழுவின்தலைவருக்கும்இடையில் விரிசல்கள் ஏற்பட்டிருந்தன.

# சந்திரனின் தென் துருவத்தில் இறங்கிய இந்திய விண்கலம்

சந்திரனில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக விண்கலங்களை அனுப்பிவரும் நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இணைந்துள்ளது.

விக்ரம் என்ற ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆளில்லாத சாதனத்தை சுமந்து சென்ற சந்திரயான்-3 என்ற விண்கலம் சந்திரனின் தென்துருவ பகுதியில் கடந்த புதன்கிழமை (23) தரையிறங்கியுள்ளது. தென்துருவத்தில் விண்கலத்தை தரையிறக்கிய முதலாவது நாடாக இந்தியா உள்ளது.



சந்திரனில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அமெரிக்கா, சோவியத்து ஒன்றியம் மற்றும் சீனா ஆகிய நாடுகள் தமது விண்கலங்களை ஏற்கனவே அங்கு தரையிறக்கியிருந்தன. தற்போது

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# எதிர்ப்புக்களை மீறி அணுக்கழிவு நீரை கடலில் கலந்த யப்பான்

பல நாடுகளின் எதிர்ப்புக்களை புறம்தள்ளி பக்குசீமா அணு உலை விபத்தின் போது சேகரிக்கப்பட்ட அணுக்கதிர்வீச்சுக் கொண்ட கழிவு நீரை யப்பான் பசுபிக் சுமுத்திரத்தில் கலந்துள்ளது.



யப்பானின் இந்த நடவடிக்கைக்கு எதிராக சீனா மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளில் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிராக தென்கொரியாவில் மெழுகுவர்த்தி போராட்டம் இடம்பெற்ற அதே சமயம், யப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கடலுணவு வகைகளுக்கு சீனா தடை விதித்துள்ளது.

கடலில் கலக்கப்படும் கதிர்வீச்சு நீர் கடல்வாழ் உயிரினங்களை பாதிப்பதால் அவற்றை உண்ணும் மனிதர்களும் பாதிக்கப்படலாம் என்ற அச்சங்கள் ஏற்பட்டுள்ளன.

1000 தாங்கிகளில் சேமிக்கப்பட்ட ஒரு மில்லியன் மெற்றிக் தொன் எடைகொண்ட கதிர்வீச்சு கழிவு நீரே தற்போது பசுபிச் சமுத்திரத்தில் கலக்கப்படுகின்றது. மெதுவாக மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை எதிர்வரும் 2040 ஆம் ஆண்டு வரையில் தொடரலாம் என தெரிவிக்கப்படுகின்றது. எனினும் யப்பானின் இந்த நடவடிக்கைக்கு அனுமதியை

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# அமெரிக்க தூதுவரின் வடக்கிற்கான பயணம் என்ன சொல்கின்றது

கடந்த 23 ஆம் நாள் அமெரிக்க தூதுவர் ஜீலி சங் மற்றும் அமெரிக்க தூதுரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் உட்பட பலர் வடபகுதிக்கு பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

பலாலி அனைத்துலக விமான நிலையத்தில் இறங்கிய சங் வடமாகாண ஆளுனர், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை சந்தித்ததுடன், அமெரிக்காவின் நிதி உதவிகளுடன் மேற் கொள்ளப்படும் அபிவிருத்திகள் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் அபிவிருத்தி திட்டங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு சென்றுள்ளார்.



யாழ் மாவட்ட கட்டளை தளபதியை சந்தித்த அவர், தலைமன்னாருக்கு சென்று கடற்படைத் தளத்தையும் பார்வையிட்டுள்ளார். அது மட்டுமல்லாது யாழ் நூலகத்திற்கு சென்று அங்கும் புகைப்படைங்களை எடுத்து தனது சமூகவலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தனது ஒவ்வொரு நடவடிக்கையையும் பதிவிட்டுள்ள அவர் அதன் நோக்கத்தையும் குறிப்பிடத் தவறவில்லை. வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்களை முகாமைத்துவமாக கொண்ட தொழில் மையங்கள் என்பவற்றை சென்று பார்த்ததுடன், புளொட், ரெலோ உறுப்பினர்கள் மற்றும் சி.வி.கே சிவஞானம் போன்றவர்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். முஸ்லீம் பிரதிநிதிகளையும் சந்திக்க தவறவில்லை.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சீனா தூதுவர் உட்பட பல அதிகாரிகளை கொண்ட குழுவினர் வடக்கிற்கு பயணம் மேற்கொண்டதை தொடர்ந்து 2022 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் சங் வடக்கிற்கு சென்றிருந்தார். அதன் பின்னர் தற்போதைய அவரின் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. யாழ் நுலகத்தை மெய்வளி நுலகமாக மாற்றித்தருமாறு அன்றைய யாழ் நகர முதல்வர் மணிவண்ணன் சீன தரப்பினரை கேட்டுக்கொண்டதை தொடர்ந்து, நுலகத்தின் புனர்நிர்மானத்திற்கு அமெரிக்கா உதவ முன்வந்திருந்தது. தற்போது தனது பயணத்தின் போது சங் அந்த வேலைத்திட்டத்தையும் பார்வையிட்டுள்ளார். வடக்கில் இடம்பெறும் காணி அபகரிப்பு, பௌத்த மயமாக்கல் தொடர்பில் கேட்டறிந்த அவர் வடக்கில் மதவன்முறையை தூண்டுவதற்கு இந்தியா முயற்சிக்கின்றதா என்ற கேள்வியையும் எழுப்ப தயங்கவில்லை. குருந்தூர்மலை விவகாரம் ஒரு இனக்கலவரத்தை தூண்டும் நடவடிக்கை என இந்திய புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளதாக தென்னிலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்த கருத்தை தொடர்ந்து ஜீலி சங்கின் கேள்வி எழுந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் அரச தலைவர் தேர்தலின் போது ரணிலுக்கான தமிழ் மக்களின் ஆதரவு, ஜே.வி.பியின் தேர்தல் எதிர்காலம் போன்றன தொடர்பிலும் அவர் தமிழ் மக்களின் மனநிலையை அறிய முற்பட்டுள்ளார்.

யாழ்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் பகுதிகளுக்கு சென்று தமிழ் மக்களின் கைத்தொழில் வளர்ச்சிகளையும் நேரில் பார்வையிட்டுள்ளதுடன், வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரிக்கும் சென்று உரையாற்றியுள்ளார்.

அதாவது வடக்கில் சீனாவை வெளியேற்றி

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# கிழக்குமாகாண ஆளுநரின் இறைமைப் பயன்படுத்தலும் புத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சரின் மதவெறியும்

வெல்கம விகாரையின் விகாராதிபதி அம்பிட்டியே சீலவங்ச திஸ்ஸ தேரர் திருகோணமலையில் தமிழரின் அறுபது பேச்சர்சு நிலத்தை ஆறுவருடங்களுக்கு முன்னர் தமது பொரலுகந்த ரஜமகாரவிகாரைக்கென அபகரித்தார். கடந்த வாரத்தில் அதனை ஆட்சிப்படுத்த முனைந்த போது கிழக்கு மாகாண ஆளுநர் திரு. செந்தில் தொண்டமான் அவருக்குக் காணிக்குள் நுழைவதற்குத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு திருகோணமலையின் நகரம் மற்றும் பட்டினங்கள் பிரதேசச் செயலாளரை நெறிப்படுத்தினார். இதன்வழி மக்களின் இறைமையைக் காக்கும் தன்னுடைய கடமையைச் சரிவரச்செய்தார்.

ஆனால் சிறிலங்காவின் பாராளுமன்றத்தில் சுயாதீனப் பாராளுமன்ற உறுப்பினரான அத்துரலியே ரத்தின தேரர் கிழக்குமாகாண ஆளுநரின் சட்டரீதியான செயற்பாட்டுக்கு ஏதிராக கேள்வி எழுப்பினார். அக்கேள்விக்கு பதிலளித்துள்ள புத்தசாசன மற்றும் மதவிவகாரங்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கா "பொரலுகந்த விகார 13-15-024 இலக்கத்தில் புத்தசாசன அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அம்பிட்டியே சீலவங்ச திஸ்ஸ தேரருக்கு அக்காணி அரசாங்கத்தால் சட்ட பூர்வமாக வழங்கப்பட்டுள்ளது என்றும், இதனால் கிழக்கு மாகாண ஆளுநரின் தடையுத்தரவு முற்றிலும் செல்லாதெனவும், தேரர் அம்பிட்டியே சீலவங்ச திஸ்ஸ அங்கு சென்று ஆட்சிப்படுத்தலாமென்றும் தீர்வு" கூறியுள்ளார்.

அதுமட்டுமல்ல திருகோணமலை மாவட்டத்தில் நகரங்கள் மற்றும் பட்டினங்கள் பிரதேச செயலகப் பிரிவுப்புகுதிகள் தொல்பொருள் மரபுரிமைக்கு சொந்தமானது எனப் பாராளுமன்றத்தில் பிரகடனப்படுத்தித் திருகோணமலை முழுவதையுமே பௌத்த சிங்கள மயப்படுத்தும் தங்கள் ஆக்கிரமிப்பை சட்டபூர்வமானது என உலகுக்கு அறிவித்து மதஇனமொழி கலவரத்தை பௌத்தமதவெறி மூலம் தோற்றுவிக்க முயற்சிக்கும் பௌத்த தேரர்களை ஊக்குவித்துள்ளார். இதனால் அரசபயங்கரவாதத்துடன் கூடிய இனக்கலவரம் ஒன்று விரைவில் ஈழத்தமிழரை மேலும் இனவழிப்புச் செய்யத் திட்டமிடப்பட்டுவருகிறது என்பது மேலும் உறுதியாகிறது. .

இந்நிலையில் மாகாணசபைகளுக்கு நிர்வாக அதிகாரங்களைப் பகிரும் 13ம் திருத்தத்தினை இலங்கைத் தமிழர்களின் கண்ணியமான வாழ்வுக்கு தொடக்கப்புள்ளி என்று உலகநாடுகள் உலக அமைப்புக்களை ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைக்கு ஈழத்தமிழர்களின் வெளியக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தீர்வுகாணவிடாது தடுக்கும் இந்தியா, இப்பொழுது அதன் ஆதரவுடன் கிழக்குமாகாணத்தில் நியமிக்கப்பட்ட ஆளுநர் செந்தில் தொண்டமானின் நியாயமான முடிவினை மதவெறித்தனமான முறையில் சிறிலங்காவின் புத்தசாசன அமைச்சு நிராகரித்துள்ளமைக்கு என்ன பதில் நடவடிக்கை எடுக்கப் போகிறது? நடைமுறை அரசியல் எதார்த்தம் இப்படியிருக்கையில் 13ம் திருத்தத்தின் வழி கட்டமைக்கப்படக் கூடிய மாகாணசபையின் ஆளுநர் கூட அரசின் கைப்பொம்மையாக ஈழத்தமிழ் மக்களைப் பாதுகாக்கும் செயற்திறன் அற்றவராகவே மதவெறி இனவெறி மொழிவெறிச் சிங்கள ஆட்சியாளர்களால் செய்யப்படுவார் என்பதற்கு கிழக்கு ஆளுநரின் உத்தரவை முற்றிலும் செல்லுபடியற்றதாக்கிய அமைச்சர் விதுர விக்கிரமநாயக்காவின் பாராளுமன்ற அறிவிப்பு தலைசிறந்த சமகால உதாரணமாகவுள்ளது. இந்நிலையில் இந்தியா நடைமுறையில் இறைமைப்பகிர்வை சிறிலங்காவுடன் பலநிலைகளில் மேற்கொண்டுள்ள அயல்நாடாகத் தன்னைக் கட்டமைத்துள்ள போதிலும் அதன் தமிழர்கள் தொடர்பான எந்த நெறிப்படுத்தலையும் சிறிலங்கா ஏற்றுச் செயற்படுத்தாது என்பது இந்திய இலங்கை உடன்படிக்கை முதல் இன்று வரை 36 ஆண்டுகால அரசியல் அனுபவமாக உள்ளது.

இப்பொழுது சீன ஆய்வுக் கப்பல்களின் வரைவை எல்லைப்படுத்துவதற்கு கூட இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங் சிறிலங்காவிடம் நேரடியாக வரவேண்டியிருப்பதைச் செப்டெம்பர் முதல் வாரத்தில் இடம்பெறவுள்ள அவரது இலங்கை வருகை உறுதி செய்கிறது. ஈழத்தமிழர்களுக்கு அவர்களது கடல்மேலான பாதுகாப்பை மேற்கொள்ளும் வலிமை இருந்த பொழுது இந்தியாவுக்கு இந்த நிலை இருக்கவில்லை என்பது வரலாறு. மீளவும் இறைமையுடன் கூடிய ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமை அடிப்படையில் ஈழத்தமிழர்கள் தங்கள் வரலாற்றுத் தாயகத்தில் வாழ இந்தியா வழிசெய்தாலே இந்தியாவின் தென்னிந்தியக்கரை இந்துமாக்கடல் பாதுகாப்பான அமைதியுடன் திகழும். இதனை ஈழத்தமிழர்களுடன் இணைந்து மாண்பமை தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் மத்திய அரசுக்குத் தெளிவாகவும் உறுதியாகவும் எடுத்துரைக்க வேண்டுமென்பதே இலக்கின் கருத்தாக உள்ளது. கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட முறையில் தமிழினவுணர்வுடன் ஈழத்தமிழர் பிரச்சினையை அணுகி இன்றைய காலத்துக்கேற்றவகையில் ஈழத்தமிழர்களுடைய பாதுகாப்பான அமைதிக்கான அனைத்துலக அணுகுமுறைகளை முன்மொழிந்து அவற்றைச் செயற்படுத்த உலகநாடுகளையும் உலக அமைப்புக்களையும் தமிழக முதலமைச்சர் ஊக்குவிக்க வேண்டும் என இலக்கு உரிமையுடன் கேட்கிறது. இவ்வாறு ஏன் தமிழக முதலமைச்சரிடம் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்றால், ஈழத்து அரசியல் தலைவர்கள் இன்று சோரம்போன நிலையில் உள்ளனர்.

அவர்கள் தன்மான இனமான உணர்வற்றவர்களாக நக்கிற நாய்க்குச் செக்கென்ன சிவலிங்கமென்ன என்ற தமிழ் முதுமொழிக்கு உதாரணங்களாக உலவிக் கொண்டிருக்கின்றனர். கடந்த வாரத்தில் புத்தசாசன அமைச்சர் விதுரவிக்கிரமநாயக்கா திருகோணமலை பொரலுகந்த நில ஆக்கிரமிப்பு விடயத்தில் ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் யாருமே எதிர்வினை செய்யாது இருக்கையில் அரசின் அலுவலரான ஆளுநர் செந்தில் தொண்டமான்தான் பிரச்சினையை உருவாக்குகிறார் எனச் சிறிலங்காப் பாராளுமன்றத்திலேயே வெளிப்படையாக ஈழத்தமிழ் அரசியல்வாதிகளின் நக்கிப் பிழைக்கும் அரசியலை நாவாரப் புகழ்ந்துள்ளார். அதுமட்டுமல்ல ஈழத்தமிழர்களின் இறைமையாளர்களாக உலகுக்கு வெளிப்பட்டு நிற்கும் இந்த ஈழத்தமிழ் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் செந்தில் தொண்டமான் போன்ற மக்களின் இறைமைக்குப் பாதுகாப்பு வழங்க முற்படும் அரச அலுவலகர்களுக்கும் அவர்களது செயல்களைச் சிறிலங்கா நிராகரிக்க நியாயத்தளங்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. இந்நிலையில் பேரறிஞர் அண்ணா அன்று எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே ஈழத்தமிழின அழிப்புக்காக வாய்திறந்து அண்ணா கப்பலும் பெரியார் கப்பலும் இணைந்து வருமென்று எச்சரித்தது போல பௌத்த மரபுரிமை பாதுகாப்பு என்னும் பெயரில் வேகம் பெற்றுள்ள சிங்கள பௌத்த பேரினவாத நில ஆக்கிரமிப்புக்குத் தமிழகக் கட்சிகள் எல்லாவற்றையும் இணைத்து மாண்பமை தமிழக முதலமைச்சர் தமிழ்நாட்டில் ஈழத்தமிழர் பாதுகாப்பு அணியாக எழ வேண்டும் என்பதே இலக்கின் இன்றைய அவசர அழைப்பாக உள்ளது.

மேலும் சிறிலங்கா ஜனாதிபதியின் நெறிப்படுத்தலான தமிழ்பௌத்தம் தமிழர் தாயகப்பகுதிகளில் இருந்த காலத்து தொல்பொருள் சின்னங்களாக அவை கருதப்பட வேண்டுமென்பதையோ அல்லது விகாரையின் பயன்பாட்டுக்கு மேலதிகமான நிலமேன் விகாரைகளுக்கென கையகப்படுத்தப்பட வேண்டும் என்ற அவரின் கேள்வியையோ கூட பௌத்த மடாதிபதிகள் கவனத்தில் எடுக்காது வெளிப்படையாக நில அபகரிப்பில் வேகமாக முன்னேறுவது இனக்கலவரமொன்றை உருவாக்குவதற்கான திட்டமிட்ட முயற்சியாகவும் உள்ளது. இந்நிலையில் சிறிலங்கா அரசாங்கத்தின் இறைமையை அதனுடைய சிங்கள பௌத்தர்களே ஏற்காத நிலை உறுதியாவதால் சிறிலங்கா அரசால் இறைமையும் தன்னாட்சி உரிமையும் உள்ள ஈழத்தமிழர்களுக்கான பாதுகாப்பான அமைதி வாழ்வை தரஇயலாதென்பது உறுதியாகிறது. இந்நிலையில் உலகத்தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் தங்கள் ஈழத்தமிழினம் விரைவில் இனஅழிப்புக்கு உள்ளாக இருக்கும் அபாயத்தில் இருந்து அவர்களைக் காக்க ஈழத்தமிழர்களுடைய இறைமையுடன் கூடிய தன்னாட்சிஉரிமையை உலகைக் காலம் தாழ்த்தாது ஏற்க வைக்க உழைப்பதே ஈழத்தில் பாதுகாப்பான அமைதிக்கான ஒரே வழியென்பதை இலக்கு வலியுறுத்திக் கூறிட விரும்புகிறது.

**ஆசிரியர்**

# நோக்கம் ஒன்று அதற்காக முடிந்தவர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி செயற்படவேண்டும்



**30/08 அனைத்துலக காணாமலாக்கப்பட்டோர் நாளினை முன்னிட்டு உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்கள நிகழ்ச்சியில் வடக்கு கிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் பொதுச் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் முக்கியமான பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.**

## லீலாதேவி ஆனந்தநடராஜா நேர்காணல்

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சர்வதேச நீதி கோரி மட்டக்களப்பில் வருகின்ற முப்பதாம் திகதி போராட்டம் ஒன்று முன்னெடுப்பதாக அறியக்கூடியதாக இருக்கின்றது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தினத்தன்று இந்த போராட்டம் நடைபெற இருக்கின்றது. அது தொடர்பாக விபரம் தாருங்களேன்?**

*இந்த சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை நாங்கள் மிக* ***விமரிசையாக*** *அனுசரித்துவருகின்றோம். ஏன்என்றால்எங்களுக்கு உரிய தினம் அது ஒன்றுதான் என்பதால் இம்முறை நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடி பாலத்தில் இருந்து ஆரம்பித்து காந்தி பூங்கா வரை எமது பேரணி சென்றடைவதற்கு மட்டக்களப்பு காணாமல் ஆக்கப்பட்ட அமைப்பால் பாரிய அளவில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது*

*நான் வடக்கில் இருந்து எமது உறவுகளுடன் சென்று அன்று நடைபெறும் போராட்டத்தில் அவர்களுடன் இணைந்து அன்றைய தினம் மேலும் எமது போராட்டத்தை மிகப்பெரிய அளவில் முன்னெடுத்து சர்வதேசத்திற்கு எமது கோரிக்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த வேண்டும் அல்லது அதற்கு நிகரான பொறிமுறை ஒன்றை கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் ஒருமுறை உரத்த குரலில் சொல்வதற்கு தயாராகி வருகின்றோம்*

*அனைத்து அரசியல் கட்சிகள் மதத் தலைவர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வர்த்தக சங்கங்கள் என அனைவருக்கும் நாம் அழைப்புக்களை விடுத்துள்ளோம்.*

*வழமை போன்று எமது மக்கள், அனைத்து அரசியல் கட்சிகள் என அனைவரும் எமக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் இதனை ஒழுங்கு செய்கிறோம்.*

**பல ஆண்டுகளாக நீங்கள் இந்த போராட்டத்தை நடத்திக்கொண்டு வருகிறீர்கள். போராடிக் கொண்டிருந்த உறவுகள் 189 பேர் தங்களுடைய உறவுகளை தேடி போராடி உயிரிழந்து விட்டார்கள். இதுவரை ஐந்து ஆண்டுகளுக்கு மேல் இந்த போராட்டத்தை நடத்திக்கொண்டு வருகிறீர்கள். எவ்வளவு தூரம் உங்களுக்கு இந்த போராட்டத்தின் ஊடாக நீதி கிடைக்கும், தொலைத்த உறவுகள் திரும்பி வருவார்கள் என எந்தளவு உறுதியோடு இருக்கிறீர்கள்?**

*உண்மையில் உறுதி என்பது அரசியல் காய் நகர்த்தல் ஊடாக வந்த உறுதி அல்ல. எங்களுடைய பாசத்தின் நிமித்தத்தினால் வந்ததுதான் இந்த உறுதி. இலங்கை மட்டத்தில் போராடி களைத்து நீதி அற்ற நிலையில் இப்போது சர்வதேசத்தை நோக்கி போராடிக்கொண்டிருக்கிறோம்.*

*உண்மையாகவே எம்மோடு இணைந்து போராடிக்கொண்டிருந்து மரணித்த உறவுகளின் கனவுகளையும் சுமந்து சென்றுகொண்டிருக்கின்றோம். அது கூட உடல் நலிந்து மனவலிமை குன்றி அவர்களுடைய பொருளாதார நிலை குறைவடைந்த நிலையிலும் கூட சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தினத்திலாவது எமது பிள்ளைகளை நினைத்து சர்வதேசத்திடம் எமது கோரிக்கைகளை முன் வைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நாம் போராடிக்கொண்டிருக்கிறோம்.*

*உண்மையில் சர்வதேசம் எங்களுக்கு தீர்வு தருவதாக இருந்தால் எப்போதோ தந்திருக்க வேண்டும். இந்த OMP அலுவலகம் அதைவிட TRC என்ற பொறிமுறை என்று ஒவ்வொன்றையும் கொண்டு வந்து திணித்திருக்கத் தேவையில்லை. நாங்கள் OMP அலுவலகம் செயலற்றது என நிரூபித்தும் கூட திரும்பவும் ஒரு TRC பொறிமுறையை கொண்டு வருகிறார்கள். அதனை இப்போதைக்கு வேண்டாம் என மறுத்தும் கூட அதில் அரசு தீவிரமாக இருக்கிறது*

*மகேஸ் கட்டுலநந்த என்ற OSM புதிய ஆணையாளர், ஆறு மாதங்களில் நான் தீர்வு கொடுப்பேன் என்று கூறி இருக்கிறார். அதை சர்வதேசம் நம்புகிறது என்றால் சர்வதேசத்தை எப்படி நம்புவதென்று தெரியவில்லை. ஒரு தீர்வு தரமுடியாத ஆட்கள் தற்போது செல்கிறார்கள் ஆறு மாதத்தில் தீர்வு கண்டுவிடுவோம் என்று. உண்மையை சொல்வதாயின் எம்மிடமுள்ள நல்ல ஐந்து ஆதாரம் கொடுத்து அதற்கு நீதியை தாருங்கள் உங்களுடன் ஒத்துழைப்பு செய்கிறோம் என கூறியிருந்தோம். 2019 ஆண்டு கொடுத்த நாங்கள் நாலு வருடம் முடிந்தும் அதற்கு அவர்கள் தீர்வு தரவில்லை.*

*தற்போது பத்து நாட்களுக்கு முன்பாக முல்லைத்தீவில் மகேஸ் கட்டுலநந்த அவர்கள் எமது உப செயலாளரை சந்தித்து அந்த ஐந்து விபரங்களையும் எங்கும் காணவில்லை அதனை புதிதாக தாருங்கள் என்று கேட்கிறார். இது ஒன்றே போதும் இந்த OMP அலுவலகம் எவ்வளவு பொறுப்பாக செயற்பட்டு கொண்டிருக்கிறது என்பதற்கு.*

*அதனால் தான் ஒவ்வொரு நாட்டின் ராஜதந்திரிகள் தூதுவர்கள் வரும்போதும் நாங்கள் தவற விடுவதில்லை. அவர்களிடம் நாம் நேரில் சென்று வாய்மூலமாகவும் எழுத்து வடிவில் மகஜர் ஒன்றையும் வழங்குகின்றோம்*

*ஆனால் அவர்களும் ஆம் ஆம் என கூறுகிறார்களே தவிர எல்லாமே அவர்களுடைய நாட்டிற்கு தேவையானது இல்லைபோல் அவர்கள் அதனை கவனிக்காது உள்ளார்கள். உண்மையாக இது பெரியவிடையம் இல்லை எமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி தேடுவது ஏன் என்றால் முள்ளி வாய்க்காலில் உள்ள முக்கியமான நான்கு காவல் நிலையங்களில் வைத்துத்தான் ஒவ்வொருவரும் கையளிக்கப்பட்டார்கள். அந்த நான்கு காவல் அரன்களில் இருந்த இராணுவ அதிகாரிகளை விசாரிப்பதன் மூலம் எமது உறவுகளுக்கு என்ன நடந்தது அவர்களை எங்கு கொண்டு சென்றார்கள் என்பதை அறிய முடியும்.*

*புதுப் புது பொறிமுறைகளை உருவாக்கி கொண்டிருக்கிறார்களே தவிர சர்வதேசம் கூட பாரமுகமாகத்தான் உள்ளது என்பதை எங்களால் கூற முடிகிறது. அது மட்டும் அல்ல சர்வதேச நாணய நிதியம் ஒரு கட்டுப்பாட்டை வைத்து நீங்கள் இப்படி செய்தால்தான் இந்த பணத்தை தருவோம் என்று ஒரு நிபந்தனை வைத்தால் கூட இலங்கை அரசாங்கம் துடித்துக்கொண்டிருக்கும். அதனை கூட செய்கிறார்கள் இல்லை தமது தேவைகளுக்காக எமது சொற்களை கேட்பதற்கு மாத்திரம் காதை கொடுத்து நிக்கிறார்கள்.*

*உண்மையிலே இதெல்லாம் எமது நம்பிக்கையினம் என்றாலும் கூட பாசத்தின் நிமித்தம் நீதி எங்கள் பக்கம் இருக்கிறது. இதற்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் போராடுகிறோமே தவிர சர்வதேசம் தூக்கி தந்துவிடும் என்று முற்று முழுதாக நம்பி நாங்கள் அதில் நடக்கவில்லை. ஏதாவது அதிசயம் நடந்து அவர்களுக்கு ஒரு தேவை வந்து ஆண்டவனாக அவர்களுக்கு தேவையை ஏற்படுத்துவதன் மூலம் அவர்கள் எங்களுக்கு சர்வதேச பொறிமுறையை உருவாக்கினால் எங்களுக்கு நீதி கிடைக்கும் அல்லாவிட்டால் நாங்கள் இதே நிலையாகத்தான் நிற்க வேண்டும் என்று நினைக்கிறேன் சர்வதேசத்தை முற்று முழுதாக நம்பி இருக்கவில்லை.*

**கோட்டபாய ஆட்சியில் இருந்த பொழுது G.L பீரிஸ் மற்றும் அலி சப்ரி இருவரையும் வடமாகாணத்திற்கு அனுப்பி அங்கே இந்த போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கு முயற்சி எடுத்தார். குறிப்பாக மரண சான்றிதழ்**

தொடர்ச்சி 17ஆம் பக்கம்




# தமிழ்த்தன்மையை இழந்து வரும் தமிழர் நகரம்

## முனைவர் ஸ்ரீஞானேஸ்வரனுடனான நேர்காணல்

**ரணில் விக்கிரமசிங்கவின் திருகோணமலையை இந்தியாவின் சக்தி மையமாக மாற்றும் திட்டம் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும்லே இந்தியா திருகோணமலையைப் பயன்படுத்த அனுமதிக்கும் ராஜதந்திரமா?**

13 ஆவது திருத்தச் சட்டம் என்பது இந்தியாவிற்கு தன்னுடைய பெருமையை நிலைநாட்டும் கௌரவ விடயமாக மாறிவிட்டது என்பதை அதன் ஆரம்பம் தொடக்கம் நாம் அவதானிக்கலாம். ஈழத்தமிழர்களின் தாகமான தமிழீழக் கோரிக்கையை முன்னெடுத்த ஒரே தலைமையான விடுதலைப் புலிகள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை புறக்கணிக்கத் தொடங்கிய போதே இந்த நிலை உருவாகிவிட்டது. என்றைக்குமே தமிழர்களுக்கான தீர்வாக 13 ஆவது திருத்தச் சட்டம் அமையப்போவதில்லை என்பது இந்தியக் கொள்கை வகுப்பாளர்களுக்கு நன்றாகத் தெரியும். மாறாக தீர்வு அது தான் என இறுக்கமாக இந்தியா உச்சரிக்கத் தொடங்கியதற்கான காரணம் அதனைத் தனது கௌரவப் பிரச்சனையாக பார்க்கத் தொடங்கியதே. எண்ணிக்கையில் மிகச்சிறிய இனமொன்று பிராந்திய வல்லரசான தனக்கு கற்பிக்க முயல்வதை இந்தியா விரும்பவில்லை. இன்றைக்கு விடுதலைப் புலிகள் ஈழ அரங்கில் தற்காலிக அமைதிக்குள்ளாகியுள்ள நிலையில் தமிழர்களிற் பெரும்பாலானவர்கள் நிராகரிக்கும் இந்த 13 ஆம் திருத்தத்தை இந்தியா வன்மமாகக் "வைத்திருக்க" முயற்சிப்பதும் அதே மனநிலையில்தான்.

இங்கு நான் பாவித்திருக்கும் வைத்திருக்க என்ற வார்த்தை முக்கியமாக கருத்திற்கொள்ளப் படவேண்டும்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம். அந்த ஒப்பந்தத்தின் சில நிபந்தனைகளைப் பிரயோகிப்பதற்காக உருவாக்கப்பட்ட அரசியலமைப்பின் இணைப்பே பதின்மூன்றாம் திருத்தச்சட்டம். அந்த ஒப்பந்தத்தில் மேலும் சில நிபந்தனைகள் உள்ளன. அந்நிபந்தனைகளுள் சீனன்குடா எண்ணைக் களஞ்சியத் தாங்கிகளை பயன்பாட்டுக்காகப் பெற்றுக் கொள்வதும் ஒன்று. ஆக அந்த ஒப்பந்தத்தை அழியவிடாமல் காப்பது இந்தியாவின் எண்ணம். அதன் சில நிபந்தனைகளைப் பிரயோகிப்பதற்காக உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தினை இயக்குவது தொடர்பான முடிவு முற்றுமுழுதாக சுயநிர்ணய உரிமையைக் கொண்ட ஸ்ரீலங்காவிடம்தான் இருக்கின்றதேயொழிய இந்தியாவிடம் இல்லை.



முனைவர்
**ஸ்ரீஞானேஸ்வரன்**
பன்னாட்டுக் குற்றங்கள் பொத்தக ஆசிரியர், பட்டய முகாமைக் கணக்காளர்

ஆக மொத்தத்தில் திருகோணமலையைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் இந்திய முயற்சிக்கும் 13ஆவது திருத்தத்தின் பிரயோகத்திற்கும் தொடர்புகளை ஏற்படுத்த முடியாது.

திருகோணமலையைக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் இந்திய முயற்சியானது பூலோக அரசியல் மற்றும் பூலோகத் தந்திரோபாயம் தொடர்பானது. சந்திராயனை வெற்றிகரமாக சந்திரனின் தென்துருவத்தில் இறக்கியுள்ள இந்திய வல்லரசு உலகின் அதிகூடிய சனத்தொகையை கடந்த ஏப்ரல் மாதம் கடந்தது. 2023இல் பூலோக வளர்ச்சியின் 15 சதவீதத்தை இந்தியா நிரப்பும் என பன்னாட்டு நாணய நிதியம் தரப்படுத்தியுள்ளது. கடந்த வருடம் ஐக்கியராச்சியத்தைப் பின்தள்ளி ஐந்தாவது பெரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக மாறியுள்ள இந்திய 2030இல் மூன்றாவது உலகப் பெரும் பெருளாதாரமாக அமெரிக்கா மற்றும் சீனாவிற்கு அடுத்ததாக வந்துவிடும் என்றும் எதிர்வு கூறியுள்ளது. கார்டியன் பத்திரிகையின் கண்ணோட்டத்தில் உலகின் முதலாவது ஏற்றுமதி வர்த்தக நாடாக தரப்படுத்தப்பட்டுள்ள சீனாவிற்கு இந்தியா பெரும் சவாலாக அமைந்துள்ளது என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆக உலகமானது பல்துருவ வலுச்சமரில் நிலைத்திருக்கும் இவ்வேளையில் திருகோணமலைத் துறைமுகம் என்பது இந்தியாவின் இதயத்துடிப்புகளில் ஒன்றாகவே இருக்கின்றது. அதனை மிக அண்மையில் உருவாகிய குவாட் (Quadrilateral Security Dialogue) அமைப்பு பயன்படுத்திக்கொள்ளும் என ஸ்ரீலங்காவின் ராஜதந்திரிகளில் ஒருவரான கலாநிதி தயான் ஜெயதிலக தெரிவித்துள்ளார்.

இந்தியா திருகோணமலையைப் பயன்படுத்த அனுமதிக்கும் ரணில் விக்ரமசிங்காவின் ராஜதந்திரமாக இதனைப் பாரக்க முடியாது. மாறாக ரணில் விக்ரமசிங்காவைப் பயன்படுத்தி பூலோக முக்கியத்துவம் மிக்க திருகோணமலையைக் கையகப்படுத்தும் இந்திய ராஜதந்திரமாகவே இதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**திருகோணமலையில் தமிழர்களின் நிலமும் கடல் வளமும் தொடர்ந்தும் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்படுவது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சமபந்தன் மௌனமாக இருப்பதேன்?**

இந்தக் கேள்விக்கான பதில் ஒன்றும் அற்புதவிளக்கைப் போல் அகழ்ந்தெடுக்கப் படவேண்டியதல்ல. அத்துடன் அப்பதில் எங்கள் ஒவ்வொருவருக்கும் தெரிந்த இரகசியம் தான். 2009இல் தமிழினப்படுகொலையை நிகழ்த்தி எமது ஆயுத விடுதலைப் போராட்டத்தை அழித்ததைத் தொடர்ந்து கூட்டப்பட்ட நாடாளுமன்றத்தில் 'தேசியத் தலைவர் மகிந்த ராசபக்ச| என்று திரு. சம்பந்தன் அறிவித்த போதே நாம் இரண்டு விடயங்களைக் புரிந்துகொண்டோம். முதலாவது திரு சம்பந்தர் அன்றிலிருந்து தமிழர்களின் இனப்படுகொலை தொடர்பாக பேசப்போவதில்லை என்பதை.

இரண்டாவது அவர் இன்னுமொரு சக்திக்கு - ஒன்றில் அது உள்நாட்டு சக்தியாக இருக்கலாம் அல்லது பூலோக சக்தியாக இருக்கலாம் - கட்டுப்பட்டே நடக்கப்போகின்றார் என்பதை.

இன்றைக்கு 13 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் திரு. சம்பந்தர் இந்த இரண்டு விடயங்களையும் உறுதியாகப் பற்றி நின்கிறார் என்பதில் எந்த கேள்விக்கும் இடமில்லை.

திருகோணமலை சிங்களவர் வசமாவது உட்பட வடக்கு கிழக்கில் தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுவருவது கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் ஓர் அங்கமே. எனவே தனது கொள்கைக்கு மாறாக அதனைக் கேள்விக்குட்படுத்த சம்பந்தர் முன்வரப்போவதில்லை.

அவ்வாறே தமிழர்களின் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக அவர் 13ஆவது திருத்தத்தையே கோரி நிற்பது பூலோக சக்தியின் தூண்டுதலின்படியே என்பது உங்களுக்குத் தெரியும். ஒகஸ்ட் 22ஆம் திகதி அமெரிக்க தூதுவர் யாழ்ப்பாணத்தில் தெரிவித்ததும் அதே கருத்தைத்தான். திரு. சம்பந்தரின் மௌனத்திற்கு அவரது வயது போன்று வேறு காரணிகளைக் கற்பிப்பது அவரைக் காப்பதற்கான ஒரு முயற்சிதான்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தொழில்வளர்ச்சி மூலம் தமிழ் மக்களின் இருப்பை தக்கவைக்க வேண்டும்

மட்டு.நகரான்

கிழக்கு மாகாணத்தில் தற்போதைய நிலைமைகள் என்பது மிகவும் ஆபத்தானதாக மாறிவருகின்றது.அதிலும் கிழக்கில் தமிழர்களின் இருப்பு பாதுகாக்கப்பட்டுவந்த நிலையில் இன்று அந்த இருப்பினை கேள்விக்குட்படுத்தி சிங்கள பேரினவாத அடக்குமுறைகளின் கீழ் சிங்கள பேரினவாதத்தின்இருப்பினைதக்கவைப்பதற்கான செயற்பாடுகள் மிகவும் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் மாவட்டத்தின் எல்லைப் பகுதியானது தொடர்ந்து சவாலுக்குட்படுத்தப்பட்டுவருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதிக்கு தமிழர்கள் போகமுடியாத சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுவருகின்றது.குறிப்பாக நீண்டகாலமாக நிலவிவரும் மயிலத்தமடு,மாதவனை மேய்ச்சல் தரை காணிப் பிரச்சினையை உரிய முறையில் தீர்க்கப்படாமையினால் இன்று சிங்கள பேரினவாத சக்திகள் அவற்றினை தமக்கு சார்பானதாக மாற்றும் நிலைமையினை காணமுடிகின்றது.



அண்மையில் மயிலத்தமடு,மாதவனை மேய்ச்சல் பகுதியில் உள்ள கால்நடை பண்ணையாளர்களின் நிலைமைகளை பார்வையிடச்சென்ற பல்சமய ஒன்றிய பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் இனவாதிகளினால் மறிக்கப்பட்டு அவர்களை சுமார் ஆறு மணி நேரம் தடுத்து வைத்திருந்ததுடன் அவர்களுக்கு கொலை அச்சுறுத்தலும் விடுத்துள்ளனர்.

மயிலத்தமடு,மாதவனை மேய்ச்சல் பகுதியில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் அத்துமீறிய வகையில் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்புகளை தடுப்பதற்காக அங்கு அமைக்கப்பட்டுள்ள மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் பாதுகாப்பு காவலரண் இன்று சட்ட விரோத குடியேற்றவாசிகளின் பாதுகாப்பு அரணாகவும் அவர்களின் அத்துமீறிய குடியேற்ற நடவடிக்கைகளுக்கான நடவடிக்கைமையமாகவும் மாறியிருப்பதுதான் கவலைக்குரிய விடயமாகவுள்ளது.



கடந்த காலத்தில் கிழக்கு மாகாண ஆளுனராகயிருந்த அனுராதா ஜகம்பத் மேற்கொண்ட செயற்பாடுகள் இன்றும் இங்கு அத்துமீறிய குடியேற்றவாசிகளாக மாறியுள்ளதுடன் அப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தினை சேர்ந்த எவரும் செல்லமுடியாத நிலைமையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.மாறாக அங்கு அத்துமீறிய குடியேற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரும் பொலநறுவை மற்றும் அம்பாறை மாவட்டத்தினை சேர்ந்தவர்களாகவே உள்ளனர்.

பல்சமய ஒன்றிய பிரதிநிதிகளை அப்பகுதியில் தேரர் ஒருவரும் நூற்றுக்கணக்கான சிங்கள காடையர்களும் சூழ்ந்து நின்று உயிர் அச்சுறுத்தல்களை விடுத்தபோதும் அங்கு ஆயுதத்துடன் பாதுகாப்பு பணியிலிருந்த மகாவலி அபிவிருத்தி பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குறைந்தது அங்கு ஏற்பட்ட நிலைமையினை ஒரு சுமுகமான நிலைக்கும் கொண்டுவர தமது முயற்சியை முன்னெடுக்கவில்லை. பல்சமய ஒன்றிய பிரதிநிதிகளையும் ஊடகவியலாளர்களையும் காடையர்கள் கொலைசெய்திருந்தாலும் கூட அதனை அவர்கள் தடுக்க நடவடிக்கைகள் எடுத்திருக்காமாட்டார்கள்.ஏன் என்றால் அவர்கள் முன்னெடுத்த திட்டமிட்ட நடவடிக்கைகள் அதுவாகவேயிருந்தது.



பல்சமய ஒன்றிய பிரதிநிதிகள் தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது அப்பகுதியில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் வாகனத்தில் கசிப்பு சாராயம் கொண்டுவரப்பட்டு மறைவான இடத்தில் வைத்து அங்கு நின்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதாக பல்சமய பிரதிநிதிகள் தெரிவித்தனர்.சுமார் ஐந்து மணித்தியாலங்களுக்கு மேல் அருகில் உள்ள இராணுவ முகாமிலிருந்தோ தடுத்துவைக்கப்பட்டிருந்த சுமார் 14கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அருந்தலாவ பொலிஸ் நிலையத்திலிருந்தோ எந்தவித பாதுகாப்பும் பல்சமய ஒன்றிய பிரதிநிதிகளுக்கு வழங்கப்படவில்லை.

அத்துடன் சுமார் ஐந்தரை மணி நேரத்திற்கு பின்னர் மட்டக்களப்பு கரடியனாறிலிருந்து பொலிஸார் வருகைதந்தனர்.இதன்போது பொலிஸார் பல்சமய ஒன்றிய உறுப்பினர்களையும் ஊடகவியலளார்களையும் அச்சுறுத்தியவர்களிடம் சமரசம்பேசினார்களேதவிரஎந்தவிதசட்டநடவடிக்கையும் எடுக்கவில்லை.அத்துடன் பல்சமய ஒன்றிய உறுப்பினர்களுக்கு எந்த அச்சுறுத்தலும் விடுக்கப்படவில்லையென அறிக்கையும் பொலிஸாரினால் பெறப்பட்டிருந்தது.

அந்த சூழ்நிலையில் அங்கிருந்துசெல்ல வேண்டும் என்பதற்காக அவ்வாறு நடந்து கொண்டாலும் மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் அத்துமீறி பிரதேசத்து மட்டக்களப்பு மாவட்டத்தினை சேர்ந்தவர்களையே சிறைபிடிக்கும் அதிகாரமும் துணிவும் யார் வழங்கியது என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது.இவ்வாறான சம்பவம் ஒன்று சிங்கள மக்களுக்கும் பௌத்த தேரருக்கும் தமிழ் பகுதிகளில் நடந்திருக்குமானால் அவர்களின் நிலைமை குறித்து சிந்தித்துப் பார்க்கமுடியாது இருந்திருக்கும்.

இந்த நாட்டில் இனங்களிடையே ஐக்கியத்திற்கும் சமாதானத்திற்காகவும் நல்வழி காட்டியாகவும் அதற்கான நடைமுறைகளை மக்கள் மத்தியில் கொண்டுசெல்லும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கும் சர்வமத தலைவர்களுக்கே இந்த நிலைமையென்றால் அப்பகுதியில் நீண்டகாலமாக இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொண்டு தமது கால்நடைகளை பராமரித்து வரும் கால்நடை பண்ணையாளர்களின் நிலைமைகளை சொல்லமுடியாத நிலையிலேயே காணப்படுகின்றது.

மயிலத்தமடு,மாதவனை பகுதியனைப் பொறுத்த வரையில் கால்நடைபண்ணையாளர்கள் பல்வேறு கஸ்டங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

மயிலத்தமடு,மாதவனை பகுதியில் தற்போதைய காலத்தில் மிகவும் வறட்சியான காலநிலை நிலவுவதன் காரணமாக நீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் கஸ்டங்களை எதிர்கொள்வதாகவும் குறித்த பகுதியில் குளம் ஒன்றை அமைத்து நீரை தேக்கிவைக்க நடவடிக்கையெடுக்குமாறு தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றபோதிலும் யாரும் அவற்றினை கவனத்தில் கொள்வதில்லையெனவும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

நாளொன்றுக்கு 3000லீற்றர் பால் கறக்கப்பட்டுவந்த நிலையில் வறட்சியான காலநிலை காரணமாக தற்போது ஒரு லீற்றர் பாலை கூட பெறமுடியாத நிலையில் விவசாயிகள் பெரும் கஸ்டங்களை எதிர்நோக்கிவருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.



அத்துடன் சட்ட விரோதமாக தமது மேய்ச்சல்தரை காணிகளை பிடித்துவருபவர்களினால் தொடர்ச்சியாக தாங்கள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகிவருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.2012ஆம்ஆண்டு முதல் மயிலத்தமடு,மாதவனை பண்ணையாளர்களின் சுமார் 3000க்கும் அதிகமான மாடுகள் கடத்தப்பட்டு,சுடப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் பல்வேறு தரப்பினரிடமும் பல்வேறு முறைப்பாடுகளை

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்



# காணியுரிமை சாத்தியமாகுமா?

துரைசாமி நடராஜா

இலங்கையில் பெருந்தோட்ட மக்களின் காணியுரிமை தொடர்பில் நீண்டகாலமாகவே பேசப்பட்டு வருகின்றது. இம்மக்கள் காணியுரிமை பெற்ற சமூகமாக தலைநிமிர்வதன் ஊடாக பல்வேறு சாதக விளைவுகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என்ற கருத்துக்கள் ஓங்கி ஒலிக்கின்றன. எனினும் இது இன்னும் சாத்தியமாகாத நிலையில் காணியுரிமை என்பது கனவாகவே இருந்து வருகின்றது. இந்நிலையில் இம்மக்களுக்கு காணியுரிமைகளை வழங்குவது குறித்த திட்டமிடல்கள் அமைச்சர்களான ரமேஷ் பத்திரண, ஹரின் பெர்னான்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோருடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் அண்மையில் தெரிவித்திருந்தார். இதனிடையே பெருந்தோட்ட மக்களுக்கு 10 போர்ச் காணி வழங்கப்பட வேண்டுமென்பது கொள்கை ரீதியான தீர்மானமாகுமென்றும், இந்த காணி உரிமத்தை வழங்குவதில் தற்போது காணப்படும் நடைமுறை சிக்கலுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்றும் அரசதரப்பு செய்திகள் வலியுறுத்துகின்றன. இது ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும்.

மலையக மக்கள் இலங்கைக்கு வருகைதந்து 200 வருடங்கள் ஆகியுள்ள போதும் இம்மக்களின் தேவைகள் பலவும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் நாளுக்கு நாள் நீண்டுகொண்டே செல்கின்றன. அவ்வப்போது மலையக அரசியல்வாதிகளின் அழுத்தத்துடன் ஒரு சில பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றபோதும் இன்னும் அதிகமான பிரச்சினைகள் தீர்வு காணப்படாது எஞ்சி நிற்கின்றன. இம்மக்கள் ஆண்டாண்டு காலமாக தேசத்தின் செழுமைக்கு அர்ப்பணிப்பான சேவையினை வழங்கி வருகின்றபோதும் இவர்களின் வீடுகள் இருளில் மூழ்கிக் கிடப்பது ஒரு சாபக்கேடோ என்றே எண்ணத் தோன்றுகின்றது. மலையக மக்களின் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளுள் காணியுரிமை மற்றும் வீட்டுரிமை தொடர்பான பிரச்சினை முக்கிய இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. நாட்டிலுள்ள ஏனைய சமூகத்தினர் காணியுரிமை பெற்ற சமூகமாக வாழுகின்ற நிலையில் மலையக மக்கள் காணியுரிமை இன்றி வாழ்வதானது அம்மக்களின் அபிவிருத்தி பின்னடைவு காண்பதில் கணிசமான செல்வாக்கு செலுத்துகின்றது.

இலங்கையில் 1980 இல் 211,256 எக்டேயரில் தேயிலை உற்பத்தி இடம்பெற்றது. இவ்வருடத்தில் நுவரெலியா மாவட்டத்தில் 39,930 எக்டேயர் பரப்பில் தேயிலை உற்பத்தி இடம்பெற்ற அதேவேளை கண்டியில் 71,105 எக்டேயர் பரப்பில் தேயிலை உற்பத்தி இடம்பெற்றது. 2002 இல் 193,925 எக்டேயர் பரப்பில் தேயிலை உற்பத்தி இடம்பெற்ற நிலையில் நுவரெலியா மாவட்டத்தில் 50,266 எக்டேயர் பரப்பிலும், கண்டி மாவட்டத்தில் 18,667 எக்டேயர் பரப்பிலும் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. எனினும் பின்வந்த காலங்களில் மலையகத்தில் தேயிலை விளைநிலங்கள் பல்வேறு தேவைளுக்காக சுவீகரிக்கப்பட்டதும், அங்குவாழ் மக்களின் இருப்பு சிதைக்கப்பட்டதும் யாவரும் அறிந்ததேயாகும்.

1972 முதல் 1975 ம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதியில் 169,208 எக்டேயர் தேயிலைக் காணிகள் அரசுடைமையாக்கப்பட்டன. இவ்வாறு அரசுடைமையாக்கப்பட்ட காணிகள் பொதுக் கூட்டுத்தாபனங்களுக்கும், கூட்டுவு இயக்கங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன. 1977 இல் பதவிக்கு வந்த அரசாங்கம் பெருந்தோட்ட நிர்வாகத்தை சீரமைத்ததுடன் அதனை மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் என்பவற்றின் கீழ் கொண்டு வந்தது. அப்போது நிர்வகிக்கப்பட்ட தேயிலைக் காணிகளில் 61 வீதமானவை அரச நிறுவனங்களிடமும், 39 வீதமானவை சிற்றுடைமைகளிடமும் காணப்பட்டன. 1972 வரை பிரித்தானிய கம்பனிகளுக்கு சொந்தமான காணிகள் அதன் பின்னர் தேசியமயமாக்கப்பட்டன. 1990 இன் பின்னர் காணிகள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டன. பெருந்தோட்டக் காணிகளை பல்வேறு காரணங்களை முன்வைத்துசுவீகரித்த வரலாறு அதிகமாகவுள்ளது. எனினும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு இதனால் எவ்விதமான நன்மையும் ஏற்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். 1930 முதல் 1987 வரையான 57 வருட காலப்பகுதியில் அரசாங்கம், நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வழங்குவதனை முக்கிய விவசாய அபிவிருத்தி நடவடிக்கையாக மேற்கொண்டு 105 ஆற்றுவடிநில அபிவிருத்தி திட்டங்களைஅமுல்படுத்தியது. அவற்றின்மூலம் சுமார் இரண்டரை இலட்சம் ஏக்கர் நிலத்தை ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு இடையே பிரித்துக் கொடுத்துள்ளது. இதேவேளை மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சுமார் 55 ஆயிரம் குடும்பங்களுக்கு ஒரு இலட்சத்து 65 ஆயிரம் ஏக்கர் காணிகளை அரசாங்கம் பிரித்துக் கொடுத்துள்ளது. எனினும் எந்த ஒரு திட்டத்தின் கீழும் மலையக மக்கள் உள்ளீர்க்கப்படவில்லை என்பது வருந்தத்தக்கதாகும்.

1980 இல் பயனற்ற தேயிலைக் காணிகள் என்று பத்தாயிரம் எக்டேயர் காணிகள் கம்பளை, கண்டி, உலப்பனை, கடுகண்ணாவ போன்ற பகுதிகளில் அடையாளப்படுத்தப்பட்டன. இந்நிலத்தில் மாற்றுப்பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருந்த நிலையில் இதற்கான அனுசரணையாக உலக வங்கி இருந்தது. இத்திட்டத்தின் கீழ் ஏலக்காய்,கராம்பு போன்ற வாசனைப் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. எனினும் பின்னர் காணியற்ற கிராமிய மக்களுக்கே இந்நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இத்தோட்டங்களில் வசித்த இந்திய வம்சாவளி தொழிலாளர்களுக்கும் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் நிலைமை 'செவிடன் காதில் ஊதிய சங்காகவே' இருந்தது.

### இனக்கலவரங்கள்

மலையக மக்களுக்கு காணி வழங்குவதற்கு பதிலாக அவர்கள் மலையகப் பகுதிகளில்இருந்துவிரட்டியடிக்கப்பட்ட வரலாறுகள் அதிகமுள்ளன. இந்த வகையில் 1948 இல் இலங்கை சுதந்திரமடைந்தவுடன் டீ.எஸ்.சேனநா யக்கவினால் புவக்கொகுபிட்டிய தோட்டத்தில் தோட்ட லயன்களில் வாழ்ந்த 400 குடும்பங்கள் தோட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இதற்கெதிராக வழக்கு தொடரப்பட்டபோதும் அது தோல்வியிலேயே முடிவடைந்தது. மலையக மக்களை அவர்கள் வாழும் பகுதியில் இருந்து வெளியேற்றுவதற்கு ஆட்சியாளர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் துணைபோயுள்ளதாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர். உசவசம போன்ற தோட்டங்களில் 'மாற்றுப்பயிர்ச்செய்கை பன்முகப்படுத்தல்' என்ற கோதாவில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கண்டி, மாத்தளை, யட்டியாந்தோட்டை, அவிசாவளை போன்ற பகுதிகளிலுள்ள தோட்டக் காணிகளில் இருந்தும் லயன்களில் இருந்தும் வெளியேற்றப்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். இதைப்போன்றே மலையக பெருந்தோட்டப் பகுதியில் மலையக மக்களின் பலத்தை குறைக்கும் வகையில் திட்டமிட்ட குடியேற்றங்கள் 1972,1975,1977ம் ஆண்டுகளில் முனைப்பாக மேற் கொள்ளப்பட்டன.

திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு துணைபோகும் வகையில் இனக்கலவரங்கள் ஏற்படுத்தப்பட்டு மலையக மக்கள் விரட்டியடிக்கப்பட்டமை கசப்பான நிகழ்வுகளேயாகும். இவ்வாறு விரட்டியடிக் கப்பட்ட தொழிலாளர்கள் சிலர் கம்பளை போன்ற நகரங்களில் உண்ண உணவின்றியும் உடுக்க ஆடையின்றியும் பிச்சைக்காரர்களாக வலம்வந்த வரலாறு கொடுமையிலும் கொடுமையாகும். 'இலங்கையர்' என்ற பொது வரையறை இங்கு மறுதலிக்கப்பட்டு இனம்,மதம் போன்றனவும், இனவாத சிந்தனைகளுமே மேலோங்கிக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மலையக மக்கள் சொந்த நாட்டில் அந்நியராகக் கருதப்பட்டனர்.

இதேவேளை ஒரு நாட்டின் நிலப்பயன்பாடு,காணியுரிமை என்பன அப்பிரதேச மக்கள் ஈடுபட்டிருக்கும் பொருளாதார நடவடிக்கை, அவர்கள் கொண்டிருக்கும் காணியுரிமை, அவர்களுடைய வீட்டுரிமை, இயற்கை வளங்கள் அதாவது காடுகள், ஆறுகள், நீர்வீழ்ச்சி போன்றவற்றை புலப்படுத்துவதாக அமையும். வடக்கில் ஒரு கிராமப் பகுதியை எடுத்துக் கொண்டாலும் அங்கு கிராமங்களில் வாழும் மக்களின் வீடுகளுக்கும் காணிக்கும் காணிப்பதிவு இருக்கும். இதைத்தவிர அப்பகுதியில் பாவிக்கப்படாத முடிக்குரிய காணிகள் அல்லது காடுகள் காணப்படலாம். ஆனால் தோட்டப் பகுதியை எடுத்துக் கொண்டால் இங்கு முழு நிலப்பகுதியுமே பெருந்தோட்டங்களாகக் காணப்படுவதால் அவர்களின் குடியிருப்பு என்ற அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களின்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# மலையகம் 200:

## தொடரும் மலையக தமிழ் மக்களின் அவலத்திற்கு முடிவு காணும் பயணத்தின் தொடக்கமாக மாறவேண்டும்.

மொரிசியஸ் நாட்டில் வருடம் தோறும் நவம்பர் 2ம் திகதி ஒரு விசேட நாளாக நினைவுகூரப்படுகிறது. ஏனெனில் அன்றுதான் - அப்போது பிரித்தானியாவின் கலனியல் நாடாக இருந்த இந்தியவின் பிஹார் மாநிலத்தில் இருந்து 36 'ஒப்பந்தக் கூலிகளை' (Indentured Labourers) ஏற்றிக்கொண்டு கல்கத்தா துறைமுகத்திலிருந்தது 10.09.1834ல் புறப்பட்ட முதலாவது கப்பலான அட்லஸ் (Atlas) அந்நாட்டை வந்தடைந்தது. அதுவே 'இந்திய ஒப்பந்தக் கூலிகள்' மொரிசியஸ் நாட்டில் தமது முதலாவது காலடியை வைத்த தினமாகும். அதன்பின்னர் அங்கு ஒப்பந்தக் கூலிகளாகச் சென்று அங்கு குடியேறிய சுமார் 451,800 பேரும் அவர்களது சந்ததியினரும் நவீன அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு அந்நாட்டின் பெருமைமிக்க மைந்தர்களாகவும் ஆட்சியாளர்களாகவும் மாறியிருக்கிறார்கள். அவர்கள் வந்திறங்கிபோது அவர்களது தங்குமுகாமாக இருந்த ஆப்ரவாசி காட் (Aapravasi Ghat) இன்று உலக பாரம்பரிய தளமாக (World Heritage Site) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.



ஆனால் சிங்களப் பேரினவாத இலங்கையிலே மலையகத் தமிழ்மக்கள் தமது மூதாதையர் மலையக மண்ணில் கால்பதித்து 200 வருடங்கள் ஆகிவிட்டதை இப்படி பெருமையோடு கொண்டாட முடியுமா? மொரிசியஸ் தீவில் 'ஒப்பந்த கூலிகள்' 1934 ல் கால் பதிப்பதற்கு 11 வருடங்களுக்கு முன்னர், 1938ல் 165 'ஒப்பந்த கூலிகளை' கல்கத்தாவிலிருந்து ஏற்றிக்கொண்டு பிரித்தானிய கயானா தீவுக்கு ஹெஸ்பெரஸ் (The Hesperus) கப்பல் புறப்படுவதற்கு 15 வருடங்களுக்கு முன்னர், மத்திய மலைநாட்டில் 1823 லே உருவாக்கப்பட்ட முதலாவது கோப்பி தோட்டத்துக்கு - , சரியாக 200 வருடங்களுக்கு முன்னர், 27 கிலோ மைல் மாத்திரமே தொலைவில் உள்ள இலங்கைக்கு அரசின் எவ்வித கட்டுப்பாடும் கண்காணிப்பும் இன்றி மலையக தமிழரின் மூதாதையர்கள் தென் இந்தியாவில் இருந்து திருட்டுத்தனமாக, ஏமாற்றி, படகு மூலமும் தோணிகள் மூலமும் கொண்டு செல்லப்பட்டனர்.

கல்வியறிவற்ற அடிமட்ட இவ்வுழைப்பாளர்களின் மரண யாத்திரை அவர்கள் தலைமன்னாரில் இறங்கியவுடனே தொடங்கிவிட்டது. அங்கிருந்து மலேரியா நோயும் வனவிலங்குகளும் மலிந்த அடர்ந்த காட்டுவழியாக சுமார் 157 மைல் தூரம் நீரின்றி, உணவின்றி, பாதுகாப்பின்றி நடந்து மாத்தளை சென்றடைந்தபோது புறப்பட்டவர்களில் 100 க்கு 25 முதல் 40 வீதம் வரை மடிந்து போயினர். கடும் வறட்சியான தென்னகத்தில் இருந்து குளிரும் மழையும் கூடிய உயர்மத்திய மலைநாட்டை சென்றடைந்து சூரியன் உதிப்பதற்கு முன்னமே விழித்தெழுந்து அதிகாலை முதல் கடுங்குளிரிலும் அடைமழையிலும் கொடும் வெயிலிலும் கடுமையாக உழைத்து, பரம ஏழையாக கந்தல் நிலையில் லயன் அறைகளில் மலசகூடமோ மருத்துவ சுகாதார வசதியோ அற்றவராக, நலிவுற்று நோயுற்று மாண்டவர்கள் கோப்பிச் செடிக்கும் தேயிலை புதருக்கும் உரமான, துயர நிலைமையை விபரித்தால் அதுவே ஒரு கண்ணீர் காவியமாகிவிடும்.

அட்டைகளும் வன விலங்குகளும் மாத்திரமே வாழ்ந்த மனித நடமாட்டமே இல்லாத உயர்மத்திய மலைநாட்டில் அடர்ந்த காடுகளை வெட்டி நிலத்தை செப்பனிட்டு கோப்பி பெருந்தோட்டங்களையும் - அது ஒருவகை இலையுருட்டி நோயால் அழிந்தபின்னர் - தேயிலை ரப்பர் தோட்டங்களை உருவாக்கி அங்கு முதன் முதலில் குடியேறிய இவர்கள் சுமார் பத்து தலைமுறைகளாக அங்கு வாழ்ந்து, நிலைப்பெற்று மலையக தமிழர் என்ற இனஅடையாளத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும் இன்னும் இவர்கள் 'இந்திய தமிழர்' என்றே அரச பதிவுகளில் குறிப்பிடப்படுகிறார்கள்.

இலங்கை சுதந்திரம் பெறும்போது தேயிலை ரப்பர் தென்னை ஆகியவற்றின் மூலம் பெறப்பட்ட நாட்டின் மொத்த ஏற்றுமதியின் வருமானத்தில் 90.7 சத வீதத்தை கொண்டிருந்தது. 150 வருடங்களுக்கும் அதிகமான நீண்ட காலம் மலையக தோட்ட தொழிலாளரின் வியர்வையும் இரத்தமுமே இந்நாட்டிற்கு தேவையான அந்நிய செலவாணியை ஈட்டித்தந்தது. இவர்களது உழைப்பால் பெறப்பட்ட வருமானமே இந்நாட்டின் புதியபொருளாதார அபிவிருத்திக்கு தேவையான பாதைகள் அமைப்பதற்கும் தொலைத்தொடர்பு வலைப்பின்னலை உருவாக்குவதற்கும் மருத்துவமனைகள் நிர்மானிப்பதற்கும் முழு நாட்டுக்கும் தேவையான உணவுப்பொருட்கள் ஆடைகள் மற்றும் அத்தியாவசியமற்ற ஏனைய பொருட்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கும் செல விடப்பட்டன.

பெருந்தோட்ட பொருளாதாரத்திற்கும் தோட்ட தொழிலாளர்களுக்குமே மற்றெவரையும் விட மிகக்கூடுதலாக இந்நாடு கடமைப்பட்டிருக்கிறது. சுதந்திரம் கிடைத்ததும் இவர்களுக்கு இந்நாடு அதற்கு தனது நன்றிக்கடனை தனது பாணியில் திரும்பிச் செலுத்தியது. சுந்திரம் கிடைத்த 8 மாதங்களில் இவர்களின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டது. ஓரிரவுக்குள் இவர்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டனர். பின்னர் இரு அரசாங்கங்களால் திணிக்கப்பட்ட ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் பெரும்பாலான



**பி.ஏ. காதர்**


குடும்பங்கள் சிதைக்கப்பட்டன. 1953 வரை இவர்களே நாட்டின் இரண்டாவது பெரிய தேசிய இனமாக இருந்தனர். இந்த நிலைமை மாறி இன்று நான்காவது சிறிய தேசிய இனமாக மாற்றப்பட்டுள்ளனர். மலையக தமிழர்களின் சனத்தொகை வீழ்ச்சிக்கு பல்வேறு காரணங்கள் இருப்பினும் இவர்கள் மீது திட்டமிட்ட முறையில் திணிக்கப்பட்ட கருத்தடை அதற்கு ஒரு பிரதான காரணமாகும். இன்று பல்வேறு வழிகளில் திட்டமிட்ட முறையில் இவர்கள் தாம் உருவாக்கிய மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்படுகின்றனர்.

இன்றும் இலங்கையில் மிக மோசமாக சுரண்டப்படுகின்ற பாரபட்சத்துக்குள்ளாகின்ற மக்கள் மலையக தமிழ் தொழிலாளர்தான். இலங்கையிலே வேடர்களுக்கு அடுத்தபடியாக கல்வித்தரத்தில் இவர்களே மிகவும் பின்தங்கி இருக்கிறார்களா. அவர்களுக்கு காணி இல்லை, இன்னும் குதிரை தொழுவம் போன்ற லயங்களித்தான் அவர்கள் வாழ்கிறார்கள், அத்தியாவசிய சேவைகள் பலவற்றை அரசாங்கம் வழங்குவதில்லை, அவற்றை தோட்ட நிர்வாகமே கட்டுப்படுத்துகிறது. அதனால் தோட்ட தொழிலாருக்கு இன்னும் முகவரி கூட கிடையாது. அவர்களுக்கு உரிய ஊதியம் வழங்கப்படுவதில்லை, அவர்கள் மத்தியில் பிறப்பு வீதம் குறைவு, இறப்பு வீதம் அதிகம் , இலங்கையிலே ஊட்டச்சத்து பற்றாக்குறை இவர்கள் மத்தியில்தான் அதிகம் காணப்படுகிறது. இவ்வாறு சமூக அளவுருக்களில் (social parameters) பிற சமூக குழுக்களை விட இவர்களே பின்தங்கிய நிலையில் வைக்கப்பட்டுள்னர். குடியுரிமை பிரச்சினை தீர்க்கப்பட்டபின்னரும் கூட இன்றும் இலங்கையில் மூன்றாந் தர பிரஜைகளாக நடத்தப்படுகிறார்கள்.

ஒரு சமூகம் சிலவருடங்கள் அல்லது சில தசாப்தங்கள் கொடுமைகளையும் துயரங்களையும் அனுபவித்திருக்கலாம். ஆனால் இவர்களது அவல வாழ்க்கை இரண்டு நூற்றாண்டுகள் கடந்தபின்னரும் கூட இன்னும் நீடிக்கிறது என்றால் அதற்கு காரணமென்ன? ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் 90 சத வீதத்தை தங்களது உதிரத்தாலும் உழைப்பாலும் 150 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக ஈட்டித்தந்த ஒரு சமூகத்தை ஒரு அரசு இப்படி நடத்திடும்போது சக சமூகங்கள் மௌனமாக வேடிக்கைப்பார்த்துக்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# ஈழத்தமிழின அழிப்புக்கு நீதிபெற இந்தியா இனியாவது உதவ வேண்டும்



தோழர் தியாகு

**கேள்வி:**

**மக்களையும் மக்களையும் இணைத்தல் என்ற திட்டம் சிங்களச் சந்தையைப் பலப் படுத்திச் சிறிலங்காவை பொருளாதார நெருக் கடியில் இருந்து மீட்க உதவுமே தவிர ஈழத் தமிழர் தேசியப் பிரச்சினைக்கு எப்படி உதவும்?**

**பதில்**

இந்தத் திட்டத்தின் உட்பொருள் இந்தியப் பெருங்குழுமங்களான அம்பானிகள் - அதானிகளுக்கு இலங்கைத் தீவை அங்காடி (சந்தை) ஆக்குதல், முதலீட்டுக் களமாக்குதல் என்பதே தவிர எந்த மக்களை எந்த மக்களோடு இணைக்கப் போகிறார்கள்? சிறிலங்காவைப் பொருளியல் நெருக்கடியிலிருந்து மீட்பது என்றால் இனவழிப்புக் குற்றம் புரிந்த சிங்களப் பேரினவாத அரசை நிலைப்படுத்தி வலுப்படுத்தல் என்று பொருள். இது ஈழத் தமிழர் தேசியப் பிரச்சினைக்கு உதவாது என்பது மட்டுமல்ல. அப்படி ஒரு சிக்கல் இருப்பதையே அறிந்தேற்க மறுப்பதும் ஆகும்.

**கேள்வி:**

**தமிழ்நாட்டுக்கு மின்சாரத் தட்டுப்பாடு உள்ள நிலையில் இலங்கைக்கு தமிழ்நாட்டு மின்சாரத்தை வழங்குவது முறையா?**

**பதில்**

தமிழ்நாட்டுக்கு மின்சாரத் தட்டுப்பாடு இல்லை என்றுதான் அரசு சொல்கிறது. இது மின்மிகை மாநிலம் என்றும் சொல்லிக் கொள் கின்றனர். தோற்றத்துக்கு இது சரியாகவும் இருக்கலாம். ஆனால் இன்னும்கூட மின்சாரம் பார்க்காத குக்கிராமங்கள், மலைக் கிராமங்கள் இருக்கவே செய்கின்றன. காவிரி, முல்லைப் பெரியாறு உள்ளிட்ட ஆற்றுநீர் உரிமைகளை இழந்து நிற்கும் நிலையில் மின் இறைவைப் பொறிகளை நம்பியே உழவுத் தொழில் பிழைத்துள்ளது. பயிர்த் தொழிலுக்கு இலவச மின்சாரம் என்று சொல்லப்பட்டாலும் அது தேவையான நேரங்களில் தேவையான அளவுக்குக் கிடைப்பதில்லை. சிறு குறு நடுத் தொழில்கள் ஏராளமாக மூடிக் கிடக்கின்றன. இவற்றில் சில சொந்தமாக மின்னியற்றிகளை வைத்து இயங்க வேண்டிய நிலை. இதை எல்லாம் சரி செய்தால் வீட்டுக்கும் நாட்டுக்கும் தேவையான மின் சாரம் அனைத்தும் பொதுத் தொகுப்பிலிருந்து வழங்குவதனால், தமிழ்நாட்டின் மின் தட்டுப்பாடு அப்போதுதான் வெளிப்படையாகத் தெரிய வரும்.

மின் தட்டுப்பாடே இல்லை என்று வைத்துக் கொண்டாலும் தமிழ்நாட்டு மின் சாரத்தை இலங்கைக்கு ஏன் தர வேண்டும்? இப்படித் தருவதற்கு இந்தியா தமிழ்நாட்டிடம் அனுமதி கேட்டதா? கேட்காது, ஏனென்றால் தமிழ் நாட்டுக்குத் தன் இயற்கை வளங்கள் மீது - அந்த வளங்களைக் கொண்டு ஆக்கப்பெறும் மின்சார ஆற்றலின் மீது – இறைமை ஏதும் இல்லை. தமிழ்நாட்டின் அனல் மின்சாரம் (நெய்வேலி), அணுமின்சாரம் (கல்பாக்கம், கூடங்குளம்) எதிலும் தமிழ்நாட்டுக்கு உரிமை வழிப்பட்ட பங்கு ஏதுமில்லை. இந்த மின்சாரத்தை வெளி மாநிலத்துக்கோ வெளிநாட்டுக்கோ அனுப்புவதா, எவ்வளவு அனுப்புவது என்பதெல்லாம் தமிழ்நாட்டின் முடிவுக்கு உட்பட்டதன்று. தெற்கா சியாவை இந்தியாவின் மின் அங்காடியாக மாற்று வது இந்திய ஆளும் வகுப்பின் நெடுங்காலத் திட்டம். இலத்தீன் அமெரிக்க நாடுகளை வட அமெரிக்க வல்லரசியம் பார்த்தது போலவேதான் இலங்கையையும் இந்திய வல்லரசியம் பார்க்கிறது என்பதற்கே இது மீண்டும் சான்றாகிறது.

**கேள்வி:**

**நரமனுச சங்கார என்னும் அமிஷாவின் உச் சரிப்பை இனவழிப்பு என எப்படித் தமிழ்ப் படுத்தலாம்?**

**பதில்**

"இதே UPA கூட்டணிதான் இலங்கையில் தமிழர்கள் ஒழிக்கப்படக் காரணமாக இருந்தார்கள்" என்று இராமேசுவரத்தில் அமித்சா பேசியதாகத் தமிழ்நாட்டுத் தமிழ் ஊடகங்களில் செய்தி வந்துள்ளது. "Genocide of Tamils in Sri Lanka" என்று அவர் பேசியதாக ஆங்கில ஊடகங்கள் கூறுகின்றன. எனவே அவர் இனவழிப்பு என்று சொன்னதாகவே நாம் பொருள் கொள்ளலாம். இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் அனைத்திந்தியத் தலைவர், நாட்டின் உள்துறை அமைச்சர் இப்படிப் பேசியிருப்பது முக்கியமானது.

நமது கவலையெல்லாம் இது தமிழர்களை ஏமாற்றும் வெற்றுப் பேச்சாகவே இருந்து விடக் கூடாது என்பதுதான். நடந்தது இனவழிப்புதான் என்றால் இனவழிப்புக்கு ஆளான தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்ய அமித்சாவும் இந்திய அரசும் செய்யப் போவதென்ன? இனவழிப்புக்கு நீதி பெற தமிழர்கள் எழுப்பும் கோரிக்கைகளை இனியாவது இந்திய அரசு ஆதரிக்குமா? ஆதரிக்க வேண்டும் என நாம் கோரத் தயங்கக் கூடாது.

**கேள்வி:**

**திமுகவின் ஈழத்தமிழர் குறித்த அக் கறையின்மை அண்ணா மலையின் கச்சத்தீவு மீட்பு கோசத்திற்கு வழிவகுத்து தமிழரிடையே இந்துத்துவ விரிவாக்கத்திற்கு உதவுகிறது எனலாமா? திமுக வினரிடை ஈழத்தமிழர் தேசியம் குறித்துப் பேச உட்கட்சித் தடை விதிக்கப் பட்டுள்ளதா?**

திமுக ஆட்சியில் இருக்கும் போதெல்லாம் இப்படித்தான் நடந்து கொள்ளும். இந்தச் சிக்கலில் மட்டுமல்ல, தமிழர் நலவுரிமை சார்ந்த எல்லாச் சிக்கலிலும் இப்படித்தான் நடந்து கொள்ளும். பதவி அரசியலுக்குப் போராட்ட அரசியலைப் பலிகொடுப்பதன் விளைவு இது. அதே போது திமுக அணிகளும் திமுக பக்கமிருக்கும் வெகுமக்களும் நமக்குத் தேவை என்பதை மறந்து விடக் கூடாது. அதே போல் திமுக அரசை நமக்கு ஆதரவாக நிலை எடுக்க வைப்பதும் தமிழ்நாட்டளவிலும் இந்திய அளவிலும் பன்னாட்டளவிலும் மு த ன்மையானது. இதை அலட்சியம் செய்து விட வேண்டாம்.

கச்சத்தீவு மீட்பு முழக்கமெல்லாம் வெறும் கேலிக் கூத்து. வாக்கு வேட்டை அரசியலுக்காக என்ன வேண்டுமானாலும் பேசுவார்கள். இந்திய விரிவாதிக்க அரசு என்றாவது இலங்கையை வன்பறிப்பு செய்து தன்னோடு இணைத்துக் கொள்ளத் தீர்மானித்தால் அப்போது வேண்டுமானால் கச்சத் தீவு முழக்கம் மெய்ப்படக் கூடும். இதனை உடனடி வாய்ப்பாக நான் பார்க் கவில்லை.


• • •

# இஸ்ரேலிய விடுதலைப்பயணத்தை முன்னிறுத்தி

## ஈழமக்கள் தமது புனித விடுதலைப்பயணத்தை உலக மக்களுக்கு வெளிப்படுத்திய வரலாற்று நிகழ்வு

- **பிரான்சில் ஆரோவில் ஆர்டிங்குலோ மாதா ஆலய மலைப்பகுதியில் தமிழர் அன்புறவுக் கூடுகை மூலம் ஈழமக்கள் புனித விடுதலை யாத்திரை ஆரம்பம்**
- **இனஅழிப்பால் பாதிக்கப்பட்ட இளைய ஈழத்தமிழர்கள் தம் வாழ்வையே சாட்சியாக்கி உலக மக்களை ஈழதேச விடுதலைக்குதவ அழைத்த நெஞ்சுருகும் நிகழ்வு**

— பங்கேற்பாளரான மூத்த அரசியல் ஆய்வாளர் **சூ.யோ. பற்றிமாகரன்** —




உலக ஈழத்தமிழர் வரலாற்றில் ஈழத்தமிழர்கள் லூர்த்து அன்னையின் திருக்காட்சித் திருத்தலத்துக்கு அண்மையிலுள்ள மேகங்கள் கொஞ்சும் பிரான்சின் அசுபின் ஆரே (Aspin Aure) என்னும் குன்றில் அன்புறவு கூடுகையாக 12 13.08.2023 இல் ஈழத்தமிழர்கள் வேறுபாடுகளைக் கடந்தவர்களாக இணைந்தமை விடுதலையின் காலம் நெருங்குவதை உறுதிப்படுத்தும் முக்கிய நிகழ்வாக அமைந்தது. இந்த அன்புறவுக் கூடு கையில் வரலாற்றில் இஸ்ரேலிய விடுதலைப் பயணத்தின் முக்கிய தலைவராகிய மோசேசுக்கு சீனாய் மலைமேல் முட்செடிகளின் மத்தியில் தோன்றிய பேரொளியாக இறைவன் பத்துக் கட்டளைகளை இஸ்ரேலிய விடுதலைப் பயணத் திற்கான பாதைவரைபாக அருளி இறைவன் தனக்கும் விடுதலைப்போராளிகளுக்கும் இடை யிலான உரையாடலைத் தொடங்கியமை நினைவு கூரப்பட்டது. முதல் நான்கு கட்டளைகளாலும் ஒரே தலைமை, பலகூறுகளாகப் பிரிவுபடாமை, வெற்றுப்பேச்சின்மை, பரக்க பரக்க வாழாது வரவரக் கண்டு வாழ வாரத்தில் ஏழாவது நாளில் அமைதியாக கடவுளை முன்னிறுத்தி உழைப்பாளர்களுக்கான ஓய்வினை உறுதி செய்து புதிய வாரத்தை எதிர்கொள்வதற்கான ஆன்மீகப் பலத்தை பெறுதல் எனபன குறித்து பேசப்பட்டு, என்னுள் நானாகவே ஒன்றாகவும் வேறாகவும் உடனாகவும் உள்ள கடவுள் விடுதலை நோக்கிப் பயணிக்க பகலில் மேகமாகவும் இரவில் நெருப்புத் தூணாகவும் தானே தோன்றாத்துணையாக தெய்வ மாக விளங்குவான் என்ற இஸ்ரேலிய நம்பிக்கை மீள்வாசிப்புச் செய்யப்பட்டது. கடவுளால் ஆகாதது எதுவுமில்லை என்ற உள்ள உறுதியுடன் விடுதலை நோக்கிய பயணம் தொடரப்பட வேண்டும் என்ற அடிப்படை உண்மை மீட்டுருவாக்கம் செய்யப் பட்டது. அவ்வாறே பத்துக் கட்டளைகளின் அடுத்த ஆறு கட்டளைகளும் விடுதலைக்காகப் போராடும் மக்கள் எதை எதைச் செய்து எதை எதைச் செய்யாது தம்மை ஒரே தேச இனமாகக் கட்டமைக்க வேண்டும் என்பது எவ்வாறு விளக்கப் பட்டதென்பது மீள்வாசிப்புச் செய்யப்பட்டது.


LE PETIT JOURNAL
Journal d'informations locales
N° 888 Du 23 au 29 aout 2023
Éveil 66

Avec Notre Mère vers Notre Terre Maternelle
தாயுடன் தாயகம் நோக்கிப் பயணம்
With Our Mother to Our Mother Land

Aspin-Aure : Mont Sinai le samedi 12 août 2023
Les élus appréciés
Les Tamouls de toutes les parties du monde se sont rassemblés pour la 1ère fois, le week-end des 12 et 13 août 2023 pour parcourir un chemin spirituel vers « La Sainte Liberté » avec leurs richesses culturelles dans les vallées d'Aure-Louron, Hautes Pyrénées (Aure : A la Vierge Messagère sur la route du Col d'Aspin D918 à la borne 79 à 4 kilomètres d'Arreau.)

Le drapeau de la Sainte Liberté

Franco Tamouls accueillis chaleureusement

Serment des Tamouls d'observer les 10 commandements

Remerciements aux élus

Louron : Le dimanche 13 août 2023
Messe devant la Grande Vierge d'Artiguelongue
La Vierge Notre Dame d'Artiguelongue sur la route de Loudenvielle D25 et continuer vers la direction « Pont de Prat » et « Centrale hydroélectrique » D 725 à 5 kilomètres de Loudenvielle).

Remerciements aux bénévoles investis et impliqués

Les Tamouls Confient leur patrie à la Vierge

Chacun a fait sa démarche personnelle devant la Vierge

Rite du passage dans l'eau

Ce cheminement spirituel vers Notre-Dame d'Artiguelongue permet à chacun de revivre ensemble la riche culture tamoule, la 1ère langue la plus ancienne du monde.
Cette traversée renforce leur relation par ce partage fraternel nourri par la « Parole de Vie ».
La fraternité s'affirme à travers les Dix Commandements qui les rendent témoins de la lumière spirituelle éclairante qui leur permet d'avancer avec la vision de reconstruire leur « Mère Patrie » remplie d'amour.

Abandon confiant total à la Vierge

இன்று ஈழத்தமிழர்களின் விடுதலைப் பயணத்தின் இடைநிலையில் இன்றைய ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் சிறிலங்கா அரசாங்கத்துடனும் வெளிநாட்டு அரசாங்கங்களுடனும் தாம் கெஞ்சி யும் கொஞ்சியும் பெறும் அடிமை வாழ்வை ஈழத்தமிழ் மக்களுக்கான மகிழ்ச்சிக்கான பாதை வரைபாக காட்டி மக்களை மயக்கி நிற்பது போலவே மோசேயின் காலத்திலும் ஏன் தங்களை உணவும் நீரும் இல்லாத பாலைவன வாழ்வுக்கு விடுதலைப் பயணத்தில் அழைத்து வந்தார் என 430 ஆண்டுகள் எகிப்தில் அடிமைப்பட்டு இருந்தும் விடுதலையின் அருமையறியாத இஸ்ரேலியர்கள் தங்கள் விடுதலைத் தலைவனான மோசேயைத் திட்டித் தீர்த்தனர். இந்த நேரத்தில் மோசேசை 'நானே இருப்பவன் என்னும் பொருள்தரும்' யாவே (கடவுள்) சீனாய் மலை உச்சிக்கு அழைத்து அங்கு முட்புதர்ச் செடிகளுக்கு நடுவே நெருப்பாகக் காட்சியருளிப் பத்துக்கட்டளைகளை இஸ்ரேலிய விடுதலைப் பயணத்திற்கான பாதை வரைபாக வழங்கி, போராடும் மக்களுக்கும் கடவுளுக்கும் இடையிலான உரையாடலைத் தொடக்கனார். இதுவே இஸ்ரேலிய விடுதலைப் போராட்டத்துக்கான இறை-மனித உறவுப் பாலமாகி இறைவன் தன்னையே விடுதலை தரும் ஆற்றலாக முன்னிறுத்தி மேசே விடுதலைப் பயணத்தைத் தொடர உதவினார் என்பது இஸ்ரேலிய நம்பிக்கை. இந்த இஸ்ரேலிய வரலாற்று நம்பிக்கை நிகழ்வை ஈழத்தமிழர்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## இஸ்ரேலிய ... தொடர்ச்சி ...

தம் அன்புறவுக் கூடுகைக்கான முதல் நிகழ்வாக ஒளிஒலிக் காட்சியாக மீட்டுருவாக்கம் செய்து தங்கள் 2023ம் ஆண்டுக்கான புனித விடுதலை யாத்திரையை அருட்தந்தை கிலறி வெல்லம் அவர்கள் தலைமையில் தொடங்கிய ஈழவரலாற்று நிகழ்வு பிரான்சு ஸ்பெயின் எல்லைப் பகுதியான ஆரோ மலைப்பகுதியில் 12.08.2023 அன்று இடம் பெற்றது.

ஈழத்தமிழ் மக்களின் இவ்வரலாற்று நிகழ் வில் அப்பகுதி மேயர் மட்டுமல்ல 94 வயதான பிரான்சிய மூதாட்டியும் மற்றும் வேட்டி சால்வை அணிந்த மூத்த பிரான்சியப் பெரியார்களும் மனிதநேயம் மிகு பிரான்சிய இளைஞர்களும், தமிழர் பண்பாட்டில் தங்களுக்கு உள்ள மதிப்பை வெளிப்படுத்த சேலை வேட்டியணிந்து கலந்து சிறப்பித்தனர். பிரான்சியர்களும் ஈழத்தமிழர்களு டன் கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது கலந்து சிறப்பித்தமை "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழின் விருதுவாக்கியத்தையும் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திரு மூலரின் திருமந்திர வரிகளையும் கம்பனின் "குவலயம் தனியன்று பொதுகாண்" என்ற உலக மயமாக்க அறிவிப்பையும் எதார்த்தக் காட்சிகளாகக் கண்முன் நிறுத்தின.



அருட்தந்தை கிலறி வெல்லம் அவர்கள் தலைமையில் ஆரம்பமான இறைவழிபாட்டு நிகழ்வில் முட்செடிப் புதர் நடுவே மோசசுக்கு இறைவன் நெருப்பாகத் தோன்றி பத்துக்கட்டளை அருளிய வரலாறும் 40 நாட்கள் மோசசு மலையில் இருந்த நிலையில் இஸ்ரேலிய மக்கள் நம்பிக்கை இழந்து பொன்பசுக்கன்றுக் குட்டியைச் செய்து வழிபட்டு நன்றியற்றவர்களாக தங்கள் உள்ள உறுதியற்றதன்மையுள்ளவர்களாக இருப்பதைக் கண்டு கோபம் கொண்ட மோசசு பத்துக் கட்டளைகள்பொறித்தகற்பலகையைஉடைத்துஎறிந்ததையும்பின்னர்மீளவும் யாவோயிடம் சென்று இரண்டாவது முறையாகப் பத்துக்கட்டளைகளைப் பெற்ற பொழுது அந்த முதல் பலகையை முட்புதர்ச் செடி நெருப்பில் எரித்ததையும் நினைவு கூர்ந்த ஈழமக்கள் சாம்பலை நெற்றியில் பூசி இனிமேல் தாங்களும் விடுதலையின் உறுதிப்பாட்டின் மேல் நம்பிக்கை இழக்காது இணைந்து ஒரே ஈழதேச மக்களாக விடுதலைப் பயணத்தைத் தொடர்வோம் என உறுதிமொழியெடுத்தனர். இந்த நிகழ்வுகளுக்கான பிரான்சிய விளக்கங்களை அருட்தந்தை கிலறி வெல்லம் அவர்களும் இதற்கான சுருக்கமான தமிழ்க்குறிப்புக்களை அவரின் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் தமிழறிஞர் சூ. யோ. பற்றிமாகரன் அவர்களும் கூடவே தமிழ் இளம் பெண்கள் தங்கள் பார்வைகளையும் முன் வைத்தனர். ஏற்புரையாக 94 வயது பிரான்சிய அம்மா மட்டுமல்ல பல மூத்த பிரான்சியப் பெரியார்களும் இளையவர்களும் இணைந்து உரையாற்றினர். புனித விடுதலைப் பயணத்தின் தொடக்கத்தையும் அது பெரும் பயணமாகப் பரிணாம வளர்ச்சி அடைந்து ஈழத்தமிழ்மக்களுக்குமட்டுமல்லஉலகிற்கும்பாதுகாப்பானஅமைதிவாழ்வை அளிக்கும் இறைசத்தி மூலமாக விளங்கும் என்பதைச் சுட்டும் காலத்தடன் நிலைக்கும் நினைவுச் சின்னமாக "அமைதியின் மரம்" ஒன்றை அருட்தந்தை கிலறி வெல்லத்தின் அழைப்பில் மூத்த ஆசிரியரும் ஊடகவியலாளரும் ஆய்வாளருமாகிய சூ.யோ. பற்றிமாகரன் நட்டார். ஒவ்வொரு ஆண்டும் உலகமெங்குமுள்ள ஈழத்தமிழர்கள் இந்த அன்புறவுக்கூடுகையில் இணைந்து புனித விடுதலை யாத்திரையில் இறைதுணையைத் தங்கள் பலமாகப் பெற்று ஈழமக்களதும் உலகினதும் பாதுகாப்பான அமைதி வாழ்வுக்கு உழைக்கும் இறைபணியைத் தொடர்வார்கள் என்ற நம்பிக்கையுடன் மலைக்குன்று மேலான அன்புறவுக் கூடுகையினதும் புனித விடுதலை யாத்திரையினதும் தொடக்க நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

பத்துக்கட்டளைகள் தமிழிலும் பிரெஞ்சு மொழியிலும் இந்தப் பலிபீடத் தூண்களில் வரலாறு உள்ள மட்டும் தமிழிலும் பிரெஞ்சிலும் பத்துக்கட்டளைகள் நிலைபேறாக நிற்கும் என்பது ஒரு மகிழ்ச்சியான விடயமாகவும் உள்ளது. ஒடுக் கப்பட்ட மக்களுடன் அடக்கப்பட்ட மக்களுடன் துணைநின்று போராடும் வாழும் இறைவனாகக் கடவுள் உள்ளார் என்ற உண்மை இஸ்ரேலிய விடுதலைப்பயணத்தின் பின்னணியில் ஈழமக் களுக்கான நம்பிக்கைச் செய்தியாக அறிவிக் கப்பட்டது. அஞ்சாதீர் கடவுளால் ஆகாதது எதுவு மில்லை என்ற மரியன்னையின் வாழ்வியல் செய்தி ஈழமக்களுக்கான உள்ள உறுதியாக மீள்வாசிப்புச் செய்யப்பட்டது. தொடர்ந்து மதிய உணவு அன் புறவு கூடுகையாக இடம்பெற்றது.

அதனையடுத்து ஜினோசு பகுதியில் அமைக் கப்பட்டுள்ள லூடன்வில்லா ஏரிக்ரைக்குச் சென்று ஆர்ட்டிங்குலோ மரியன்னையின் திருவுருவினை தமிழீழத்தேச வரைபுவளைவுக்குள் எழுந்தரளச் செய்து இனஅழிப்பால் பாதிப்புற்றுத் தண்டனை நீதியை இனஅழிப்பைச் செய்தவர்களுக்கு வழங் கும் படியும் பரிகாரநீதியை இனஅழிப்பாலும் வலிந்து காணாமலாக்கப்பட்டதாலும் பாதிப் புற்று வாழ்விழந்து வாழ்வுக்காகத் துடிக்கும் பாதிப்புற்றவர்களின் கிட்டிய குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்குமாறும் இறைவனுக்கு வேண்டுதல் செய்யும் புனித விடுதலை யாத்திரை ஆரம்பமாவதை ஈழமக்கள் தங்களின் பாரம்பரிய தொன்மை இசைக்லையான பறையினைப் பிரான் சின் பறையிசைப் பெருங்கலைஞர்கள் குழு இசைப்பேராசான் பரா அவர்களின் தலைமையில் முழங்க உலகினுக்கு அறிவித்து பறையிசை முழக்கத்துடன் புனித விடுதலை யாத்திரையைத் தொடங்கினர். முதல்நாளைப் புனித விடுதலை யாத்திரையின் முடிவில் ஏரிக்குள் அன்னை மரியாளின் திருவுருவை நிறுத்தி கரையில் தமிழர்களின் பண்பாட்டுக்கலைநிகழ்வுகள் எல்லா மக்களும் பங்கேற்று ஆடிப்பாடி மகிழும் மக்கள் கலைநிகழ்வுகளாக நிகழ்த்தப்பட்டன. திருமண வாழ்வில் நாற்பது ஐம்பது ஆண்டுகளை நிறைவுசெய்த இணையர்களுக்கு மாலைமரியாதை செய்து கூட்டு வாழ்வு குடும்பத்தில் தலைவனதும் தலைவியதும் தன்னாட்சி பகிர்வாக அனுபவமா கும் பொழுதெ நாட்டிலும் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தமக்கான இறைமை வாழ்வை மக்கள் உறுதிப்படுத்தவர் என்ற உண்மை எடுத்து விளக்கப்பட்டது. பின்னர் ஈழத்தமிழ் மக்கள் ஆற்றுக்குள் இறங்கி திருவருளைக் குறிக்கும் நீரின் தொடர்பை தமிழர் மரபில் புனித தீர்த்தமாடலாகக் கருதி தங்களை நீரை அடையாளமாகக் கொண்ட திருவருளால் புனிதப்படுத்தி மனதுக்கண் மாசில்லாதவராக விடுதலைக்கு உண்மையும் நேர்மையுமான முறையில் ஒற்றுமையாக உழைப்போம் என இறைவனை முன்னிறுத்தி உறுதிமொழி எடுத்தனர். முதல்நாள் நிகழ்ச்சிகளின் முடிவு நிகழ்வாக வாகனங்களில் ஆர்டிங்குலோ மரியன்னையின் திருக்கோயில் உள்ள மலைக்குச் சென்று ஆர்டிங்குலோ மரியன்னையாகப் பல அற்புதங்கள் செய்து வரும் 6 அடி உயிர மரத்தில் செதுக்கப்பட்ட மரியன்னையின் திருவுருவின் முன்பாக ஈழமக்கள் ஒற்றுமையாக புனித விடுதலைப் பயணத்தை முன்னெடுக்க இறையருள் வேண்டி நிறைவேற்றப்பட்ட திருப்பலியில் பங்கேற்றனர். ஈழமக்களின் ஒன்றுபட்ட தேச விடுதலைப்பயணத்தை இறைவனின் துணையுடன் ஈழமக்கள் முன்னெடுக்க தாயக மக்களும் உலக ஈழத்தமிழர்களும் தேசமாக எழுந்து புனித விடுதலை யாத்திரையில் தமது அறிவால் அறியாமையையும் பொருள்வளத்தால் வறுமையையும் ஈழமக்களிடை இருந்து நீக்க உழைக்க கல்லான இதயத்தை எடுத்து கனிவான இதயத்தை ஒவ்வொரு ஈழத்தமிழர்க்கும் இறை வன் கொடுக்க வேண்டுமென்று வேண்டுதல் செய்யப்பட்டது. அன்றைய இரவுணவு அன்புறவுக் கூடுகையாக அமைந்தது.



மறுநாள் காலை உணவும் அன்புறவுக் கூடுகையாகவே அமைய மலையடிவாரத்தில் உள்ள ஆரோ உதைபந்தாட்ட அரங்குக்கு அருகில் திறந்த வெளியில் தமிழீழ வளைவுள்ள ஆர்டிங்குலோ மரியன்னையின் திருவுருவம் எழுந்தருளச் செய்யப்பட்டு திருப்பலி தமிழிலும் பிரெஞ்சிலும் நிறைவேற்றப்பட்டு புனித விடுதலை யாத்திரையை இறைவன் துணைநின்று முன்னெடுக்க வேண்டுதல் செய்யப்பட்டது. புதிதாகத் திருமுழுக்குப் பெற விரும்பிய பிரான் சியர் சிலரை முன்னிலைப்படுத்தி அவர்கள் திருமுழுக்கால் புதிய இறை வாழ்வுக்குப் புறப்படுவது போல ஈழமக்கள் புனித விடுதலைப் பயணத்திற்கான இறையருளை அவரவர் சமய நிலையில் பெற்று விடுதலையை மீளநிறுவும் பலத்துடன் எழுகிறார்கள் என்ற உண்மை விளக்கப்பட்டு இறைதுணையுடையதாகத் தொடரும் புனித விடுதலைப் பயணம் ஈழ மக்களுக்கான விடுதலைக்கான இறையாசிப் பொழிவுகளைக் கொண்டதாக இஸ்ரேயல் மக்களின் விடுதலைப்பயணத்தில் இறைவனின் பங்களிப்புப் போல் அமையும் என்கிற நம்பிக்கை பலப்படுத்தப்பட்டது.

பின்னர் தமிழீழத் தேசவரைபட வளைவுக் குள் ஆர்டிங்குலோ மரியன்னையின் திருவுருவை எழுந்தருளச் செய்த பீடத்தைச் சுமந்தவர்களாகத் தமிழ் இளையோர்கள் தமிழரின் தொன்மை மிகு கலைவடிவான பறையிசையினைப் பிரான்சின் பெருங்கலைஞர்கள் முழங்க

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# ஒரு புதிய உலக ஒழுங்கை உருவாக்கும் ஆற்றலை பிரிக்ஸ் (BRICS) அமைப்பு கொண்டிருக்கிறதா?

## பகுதி 1

அவை பாரிய சனத்தொகையைக் கொண்ட பிரமாண்டமான பொருண்மியங்கள். அதுமட்டுமல்ல அவற்றின் இலக்குகளும் பிரமாண்டமானவை தான். பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளைக் கொண்ட அமைப்பான பிரிக்ஸ் (BRICS - Brazil, Russia,India, China, South Africa) நாடுகளின் தலைவர்கள் கடந்த செவ்வாயிலிருந்து மூன்று நாட்கள் தொடரும் ஒரு உச்சி மாநாட்டை தொடங்கியிருக்கிறார்கள். உலகத் தலைநகரங்கள் அத்தனையும் இந்த உச்சிமாநாட்டைஆச்சரியம்கலந்தஎதிர்பார்ப்புடன் உற்றுநோக்கிவருகின்றன.




தென்னாபிரிக்காவின் ஜொஹன்னஸ்பேர்க் நகரில் நடைபெறவிருக்கின்ற இந்தப் பிரத்தியேக மாநாட்டில், ரஷ்ய அதிபரான விளாடிமீர் புட்டின் (Vladimir Putin) கலந்துகொள்ளமாட்டார். ஆனால் அவர் காணொளி மூலமாகப் பங்குபற்ற இருப்பதாக அறியப்படுகிறது. மொஸ்கோ, உக்ரேனில் தொடங்கிய போரின் காரணமாக, ரஷ்ய அதிபருக்கு எதிரான ஒரு பன்னாட்டுப் பிடிவிறாந்து இருப்பது அனைவரும் அறிந்த விடயமாகும். தென் ஆபிரிக்காவும் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் (International Criminal Court) ஓர் உறுப்பினராக இருப்பதனால், புட்டின் தென் ஆபிரிக்காவுக்கு வருகின்ற பட்சத்தில் புட்டினைக் கைதுசெய்யும் கடப்பாடு தென் ஆபிரிக்காவுக்கு உண்டு. உக்ரேனில் நடைபெற்று வருகின்ற போர்ச்சூழலில், அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே பூகோள ரீதியாக விரிசல்கள் அதிகரித்து வருகின்ற பின்புலத்திலே தான் இந்த பிரிக்ஸ் உச்சி மாநாடு நடைபெறுகின்றது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. நீண்ட காலமாக உலக ஒழுங்கு தொடர்பில் அதிகாரம் செலுத்தி வரும் அமெரிக்காவுக்கு, இந்த பிரிக்ஸ் அணி ஒரு சவாலாக உருவாகலாம் என்ற பார்வை இன்று பலமாக முன்வைக்கப்படுகிறது.




இந்த பிரிக்ஸ் அமைப்பில் மேலும் பல நாடுகளை உறுப்பினர்களாக இணைத்து அமைப்பை விரிவாக்கம் செய்வதற்கு மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் முன்னுரிமை வழங்கப் பட்டிருக்கின்றது. இந்தக் குழுவுக்கு அது தேவையானதொன்றாகவே கருதப்படுகிறது. அல்ஜீரியாவிலிருந்து ஆர்ஜெந்தீனா, வரை 40 நாடுகள் இந்த அமைப்பில் இணைவதற்கான தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக்கின்றன. இந்த நாடுகள் ஒரு குழுவாக இணைந்திருப்பது உலக பொருண்மியத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியது. இந்த ஐந்து நாடுகளினதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒன்றாகக் கூட்டிப், பொருட்களைக் கொள்வனவு செய்யும் ஆற்றலைக் கருத்திற்கொண்டால், ஜி7 நாடுகளின் ஆற்றலை விட அது அதிகமானதாகவே இருக்கும். மேலோட்டமாகப் பார்த்தால், உலகளாவிய வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், 26 வீதத்துக்குப் பொறுப்பாக இருக்கின்றன. இது இவ்வாறு இருந்த போதிலும் உலக நாணய நிதியத்தில் 15 வீதமான வாக்களிக்கும் உரிமையே இந்த நாடுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறான ஏற்றத்தாழ்வுகளுடன் இணைந்து, அமெரிக்கா, ரஷ்யாவின் மேல் பொருண்மியத் தடைகளை அமுலாக்கியது போல, டொலரை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தலாம் என்ற அச்சமும் இந்த நாடுகளுக்கு இருக்கின்றன. இவ்வாறான ஒரு அக்கறையின் காரணமாக இந்த நாடுகள் தனியாகவும் கூட்டாகவும் அமெரிக்க நாணயமான டொலரில் தங்கியிருப்பதைப்

**தமிழில்: ஜெயந்திரன்**

படிப்படியாகக் குறைத்து வருவது மட்டுமன்றி தங்கள் சொந்த நாணயங்களுக்கு இடையே இருதரப்பு வர்த்தகத்தைக் கணிசமான அளவு அதிகரித்துமிருக்கின்றன.

ஏதாவது ஒன்று மாற்றமடையவேண்டும் என்பதில் உடன்பாடு காண்பது ஒரு விடயம். அதே நேரம் எவ்வாறு எல்லோரும் ஒன்றிணைந்து பணியாற்றலாம் என்பதில் இணக்கம் காண் பது முற்றிலும் வேறான விடயம். 2020ம் ஆண்டிலிருந்து இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே எல்லைகள் தொடர்பாகக் கடுமையான முரண்பாடுகள் இருக்கின்றன. அதே சமயம், இந்தியா, தென்னாபிரிக்கா, பிரேசில் ஆகிய மூன்று நாடுகளும் எவ்வாறு சீனா, ரஷ்யா போன்ற நாடுகளுடன் சுமூகமான உறவைக் கொண்டிருக்கின்றனவோ அவ்வாறே மேற்குலகத்துடனும் சுமூகமான உறவை ஏற்படுத்தவே விரும்புகின்றன.



ஆகவே அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு மாற்றீடான பொருண்மியம் மற்றும் பூகோள அரசியல் தூணாக பிரிக்ஸ் அமைப்பு உருவெடுக்குமா என்பது தான் தற்போதைய கேள்வியாகும் அல்லது அந்த நாடுகளுக்கு இடையே நிலவுகின்ற உள்ளக முரண்பாடுகள் அந்த அமைப்பு சாதிக்கக்கூடியவற்றுக்கு வரையறை வகுக்குமா?

### சுருக்கமான பதில்

பிரிக்ஸ் நாடுகளின் செல்வாக்கு இன்னும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அமெரிக்காவால் வழிநடத்தப்படுகின்ற உலக ஒழுங்குக்கு இன்னொரு மாற்றீடாக அது அமையுமா? என்ற கேள்வி எழும்பும் இடத்தில் இந்த அமைப்பால் வழங்கப்படக்கூடிய பொருண் மிய மற்றும் ராஜீக முயற்சிகள் மிகவும் சிறிய தாகவே இருக்கும் என்று ஆய்வாளர்கள் கருத் துத் தெரிவிக்கிறார்கள். தொடர்ந்து மாற்ற மடைந்து வருகின்ற உலகில், இந்த அமைப்பைச் சேர்ந்த நாடுகளின் தலைவர்கள் தமக்கென ஒரு தனித்துவமான பாதையை வகுப்பார்களாக இருந்தால் அது இன்னும் அதிகமாக முரண் பாடுகளைத் தோற்றுவிக்க வாய்ப்பு உண்டு. இந்த அமைப்பு செயற்றிறன்மிக்க ஒரு அமைப்பாக மாற வேண்டும் என்றால், அது அந்த நாடுகளின் மாறுபட்ட முன்னுரிமைகளை விவேகமாகக் கையாள வேண்டிய தேவை உள்ளது. இவ் விடயத்தைக் கையாள்வது இந்தக் குழுவுக்கு இலகுவான விடயமாக அமையப் போவதில்லை.

### தென் பூகோளத்தின் குரல்

“ஒரு குறிப்பிட்ட சில நாடுகளின் தயவில் பெரும் எண்ணிக்கையான நாடுகள் தங்கி யிருக்கின்றன” என்று ஜூன் முதலாம் திகதி தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற வெளிவிவகார அமைச்சர்களின் சந்திப்பின் ஆரம்பத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய் ஷங்கர் குறிப்பிட்டார்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பலவற்றைப் பொறுத்த வரையில் இவ்வாறான உணர்வு மேலோங்கியிருப்பதைக் காணலாம்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# பிரிகோசனின் மரணம் ஏற்படுத்திய சந்தேகங்கள்

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**

ரஸ்யாவில் ஒரு இராணுவப் புரட்சியில் ஈடுபட்டு உலகின் கவனத்தை தன்பக்கம் திருப்பிய வக்னர் குழு என்ற தனியார் படையின் தலைவர் எவ்ஜெனி பிறிகோசன், பிரதமகட்டளைஅதிகாரியானடிமிற்றி உற்கின் உட்பட 10 பேர் கடந்த புதன்கிழமை (23) மாலை ரஸ்யாவில் இடம்பெற்ற விமான விபத்தில் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

*Embraer 135BJ Legacy 600* என்ற விமானம் வக்னர் குழுவிற்கு சொந்தமான தனிப்பட்ட சொந்த விமானங்களில் ஒன்றாகும். இது மிகவும் ஆடம்பரமான விமானம். விபத்துக்களில் சிக்காத வரலாறு கொண்ட இந்த விமானத்தின் பாதுகாப்பு என்பது மிகவும் உயர்வானது.

ரஸ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் இருந்து சென் பீற்றேஸ்பேக்கிற்கு சென்று கொண்டிருந்த சமயம் ரிவர் என்ற பகுதியில் விமானம் வீழ்ந்துள்ளது. விமானம் வீழ்ந்தபோது வெடிப்பதிர்வை கேட்டதாகவும், விமானத்தை நோக்கி ஏவுகணை ஏவப்பட்டதாகவும் உள்ளூர் தகவல்களை மேற்கோள் காட்டி மேற்குலக செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.



ரஸ்யாவில் உள்ள விமான எதிர்ப்பு ஏவுகணையே விமானத்தை வீழ்த்தியதாக தாம் நம்புவதாக அமெரிக்க படை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். வீழ்ந்த விமானத்தின் பாகங்களில் ஏவுகணை சிதறல்களின் அடையாளங்கள் உள்ளதாகவும் அவர்கள் புகைப்பட ஆதாரங்களை வெளியிட்டிருந்தனர். ஆனால் பின்னர் அமெரிக்காவின் பாதுகாப்பு தலைமையகமாக பென்ரகன் அதனை மறுத்துள்ளது. தம்மிடம் அதற்கான ஆதாரங்கள் இல்லை என தெரிவித்துள்ளது.



எனினும் மேற்குலக நாடுகளின் கருத்தை ரஸ்யாவின் நாடளுமன்ற பேச்சாளர் டிமிற்றி பெஸ்கோவ் மறுத்துள்ளதுடன், இது ரஸ்யாவுக்கு களங்கம் ஏற்படுத்தும் செயல் எனவும் தெரிவித்துள்ளார்.

விமானத்தின் பாகங்கள் ஏறத்தாள 4 கி.மீ சுற்றுவட்டாரத்திற்குள் பரவிக்கிடக்கின்றன. விமானத்தின் இறங்கும் பகுதியும் (லான்டிங் கியர்) ஒரு இறக்கையும் விமானம் வீழ்ந்த இடத்தில் இருந்து 3 கி.மீ தொலைவில் காணப்படுவதால் அந்த பகுதியில் மறைத்து வைக்கப்பட்ட குண்டு வெடித்திருக்கலாம் என்ற கருத்துக்களும் எழுந்துள்ளன.

விபத்து நடந்த அன்று காலை அந்த விமானத்தை வாங்குவதற்காக சிலர் வந்து பார்வையிட்டு சென்றிருந்தனர். கடந்த ஜூன் மாதம் இடம்பெற்ற சம்பவத்தை தொடர்ந்து விமானத்தை விற்பனை செய்வதற்கு வக்னர் குழுவினர் தீர்மானித்திருந்தனர். பார்வையிட வந்தவர்களை துணை விமானி விமானத்திற்குள் அழைத்துச் சென்று காண்பித்ததாக ரஸ்யாவில் இருந்து வெளிவரும் *Moskovsky Komsomolets* என்ற ஊடகம் தெரிவித்துள்ளது. ஆனால் துணை விமானியும் விபத்தில் கொல்லப்பட்டுவிட்டார். விமானத்தை பார்வையிட்டபோது எடுக்கப்பட்ட காணொளி இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அதேசமயம், இந்த விமானம் சில தினங்களுக்கு முன்னர் திருத்தப் பணிகளுக்காக விடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. விமானத்தில் வழமைக்கு மாறாக திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்படுவதை தான் பார்த்ததாக விமானத்தில் பயணம் செய்து மரணமடைந்த விமானப் பணிப்பெண் கிறிஸ்ரீனா ரஸ்போபோவா தனது பயணத்திற்கு முன்னர் தெரிவித்ததாக அவரின் குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்த விமானத்தின் திருத்தப் பணிகளில் ஈடுபட்ட அனைவரும் விசாரணை செய்யப்படுவார்கள் என ரஸ்ய தகவல்கள் தெரிவித்துள்ளன. ஆனால் திருத்தப்பணிகளுக்காக சென்றவர்கள் மூலம் வெளியார் யாராவது குண்டை பொருத்தியிருந்தால் அது ரஸ்யாவின் பாதுகாப்பில் உள்ள மிகப்பெரும் தவறாகவே கருதப்படுவதுடன், எதிர்காலத்தில் பல முக்கிய இலக்குகளை அவர்கள் நெருங்கலாம் என்ற அச்சங்களும் எழுந்துள்ளன.



இதனிடையே, வீழ்ந்த விமானத்தில் பிறிகோசன் பயணம் செய்ததற்கு ஆதராமாக பயணிகளின் பெயர் பட்டியலில் அவரின் பெயர் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றபோதும் இந்த பத்தி எழுதப்படும்வரை அதனை உறுதிப்படுத்த முடியவில்லை. ஏனெனில் கண்டெடுக்கப்பட்ட 8 சடலங்களும் மிகவும் உருக்குலைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. அவற்றை அடையாளம் காண்பது கடினம். ஆனால் அதனை டி.என்.ஏ பரிசோதனை செய்யுமாறு ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டீன் பணித்துள்ளார்.

இரண்டு தினங்கள் கழித்து விபத்தில் இறந்தவர்களுக்கு தனது அஞ்சலியை செலுத்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பிறிகோசன் மிகவும் சிறந்த வர்த்தகர், எனக்கு அவரை 1990 களில் இருந்து தெரியும். ஆனால் அண்மையில் அவர் மிகப்பெரிய தவறை மேற்கொண்டிருந்தார் என பூட்டின் தெரிவித்த கருத்து மேற்குலக ஊடகங்களில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இந்த விமான விபத்தின் விசாரணை மிகவும் அனுபவம் வாய்ந்த விசாரணையாளரான ஐவான் சிபுலாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்2014 ஆம் ஆண்டு மொஸ்கோவின் வுகோவோ விமானநிலையத்தில் இடம்பெற்ற விபத்தில் கொல்லப்பட்ட பிரான்ஸ் நாட்டை தளமாகக் கொண்ட ரோட்டல் எரிபொருள் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியின் மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.



ரஸ்யாவுக்கும் பிரான்ஸிற்கும் இடையிலான எரிபொருள் வர்த்தகத்தை முன்னெடுக்க சென்றவர் விபத்தில் கொல்லப்பட்டதும் ஒரு சதி என்றே அன்று பேசப்பட்டது.

இதனிடையே, பிறிகோசனின் தனிப்பட்ட விமானி விபத்தில் சிக்கிய விமானத்தை

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## தமிழ்த்தன்மை ... தொடர்ச்சி ...

**திருகோணமலையின் தமிழ்த்தன்மை இழக்கப்பட்டு வருவதைப் புலம்பெயர் தமிழர் எவ்வாறு தடுக்கலாம்?**

ஒரு தந்திரோபாயத் திட்டமிடலின் மூலமே திருகோணமலையின் தமிழ்த்தன்மை இழக்கப்பட்டு வருவதை புலம்பெயர் தமிழர்கள் தடுக்கமுடியும்.

எந்தெந்த வகைகளில் அல்லது நடவடிக்கைகளினால் தமிழ்த்தன்மை இழக்கப்பட்டுவருகின்றது என்பதை முதலில் அடையாளப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு அடையாளப்படுத்திக் கொண்டபின் அவற்றை தடுத்து நிறுத்துவதற்கான உடனடி மற்றும் நீண்டகாலச் செயற்திட்டங்களை வரைய வேண்டும். வரைந்த செயற்திட்டங்களை பிரயோகித்திட வேண்டும்

மேற்சொன்ன விடயங்கள் ஒரு குழுவாக புலம்பெயர் தமிழர்கள் இயங்கவேண்டிய தேவையை எங்களுக்கு உருவாக்குகின்றது. தற்போது இயங்குகின்ற குழுக்களிற் பெரும்பாலானவை சிறிய திட்டங்களை முன்னெடுக்கவும் உணவு வசதிகளை ஏற்படுத்தவுமே பெருமளவில் இயங்குவதைக் காணலாம். உதாரணமாக ஒரு புலம்பெயர் தமிழரின் பிறந்தநாளுக்கு பிள்ளைகளுக்கு பாடசாலைக்குத் தேவையான உபகரணங்களை வாங்கி வழங்க மறுத்துவிட்டு அப்பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஒருநேர உணவை வழங்க விரும்பும் பலரை நாம் காண்கிறோம். இது தவறு என்று சொல்லவதை விட புரிதலில் ஏற்படுகின்ற குறைவாகவே பார்க்க வேண்டும்.

எனது சிந்தனையின் படி:

*1.* **புலம்பெயர் தேசங்களில் உள்ள திருகோமணலையைச் சேர்ந்தவர்கள் மற்றும் திருகோணமலையைக் காக்கும் எண்ணங்கொண்டவர்கள் இணைந்து குழுவாகவேண்டும். அதேவேளை திருகோணமலையில் ஒரு நிர்வாக கட்டமைப்புடனான பொருளாதார அமைப்பு (business organization) உருவாக்கப்பட வேண்டும்.**

*2.* **மாவட்டத்திற்கான பொது வலைத்தளம் உருவாக்கப்பட வேண்டும்.**

*3.* **அந்த வலைத்தளத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள பிரச்சனைகள் பதியப்பட வேண்டும்.**

*4.* **பிரச்சனைகளுக்கு தீர்வை முன்மொழிந்து அத்தீர்வை பொருளாதார இலாபகரமானதாக அல்லது சமூக இலாபகரமானதாக மாற்ற வேண்டும்.**

*5.* **அதனூடாக வேலைவாய்ப்புக்களையும் பொருளாதாரப்பலத்தையும்உருவாக்கிக்கொள்ள வேண்டும்.**

*6.* **அந்த அமைப்பு அரசியற் கருத்துருவாக்கத்தில் தனது கால்களைப் பதிப்பித்துக்கொள்ள வேண்டும். மக்களுக்கான அரசியலை பொருளாதாரப் வளமூடாக பிரயோகத்தில் இட வேண்டும்.**

• • •

## மலையகம் 200 ... தொடர்ச்சி ...

கொடிருப்பதேன்? ஏனெனில் மௌனமாக அவர்கள் நவீன அடிமைத்தனதை ஆதரிக்கிறார்கள். அதற்குக்காரணம் அவர்களுக்கும் அதில் ஆதாயம் இருக்கிறது. நவீன அடிமைத்தனம் தொடர்ந்தால் தான் தங்கள் வீட்டுக்கு வேலைக்காரி கிடைப்பாள். தங்கள் தோட்டத்தில், கடையில், வேலைத்தளத்தில் வேலை செய்வதற்கு மலி வான கூலி கிடைப்பான்.

இந்நிலையில் உண்மையான சமூக போராளிகளின் கடமை என்ன? ஒரு துயரப்பட்ட மக்களுக்கு அனுதாபம் காட்டுகிற பிரச்சினையாகவோ ஒரு தொழிலாள வர்க்கத்தின் அல்லது ஒரு ஒடுக்கப்டுகின்ற ஒரு தேசிய இனத்தின் பிரச்சினையாகவோ மாத்திரம் பார்க்கக் கூடாது. இதனை காலனித்துவ யுகத்தின் கோரமான நவீன அடிமைத்தனத்தின் நீட்சியை முடிவுக்கு கொண்டுவரும் வரலாற்றுக் கடமையாகப் பார்க்கவேண்டும்.

1833ல் பிரித்தானிய சாம்ராச்சியத்தில் அடிமைமுறை ஒழிக்கப்பட்டபின்னர் மலிவான உழைப்பாளரின்றி நெருக்கடிக்குள்ளான பெருந்தோட்டத்துறையைக் காப்பற்றுவதற்கு நவீன அடிமைத்தனம் மாற்றீடு செய்யப்பட்டது. இது இரண்டு வகையில் செயல்பட்டது . ஒன்று ‘ஒப்பந்தக்கூலி முறை’ (Indentured Labourers). மற்றது கங்காணி (இலங்கை மலேசியா) மேஸ்திரி (பர்மா) சிர்தார், அர்காடிஸ் (அசாம்: sirdars, arakatis) போன்ற இடைத்தரகர் மூலம் திரட்டப்பட்ட ‘கடன் அடிமைகள்’ முறை. ‘ஒப்பந்தக்கூலி முறையின் கீழ் தூர பிதேசங்களுக்கு மலிவான கூலிகள் கப்பல் மூலம் கொண்டு செல்லப்படும்போது அங்கு அரசின் கண்காணிப்பு இருந்தது. இம்முறையின் கீழ் ஒரு நீதிபதியின் கீழ் எசமானுக்கும் தொழிலாளிக்குமிடையே ஒப்பத்தமொன்று கைச்சாத்தாகும். இவ்வொப்பந் தத்தின்படி கைச்சாத்திடும் தொழிலாளி ஐந்து முதல் ஏழு வருடங்களுக்கு தனது எசமானுக்கு ஊழியம் செய்யவேண்டும். எசமான் அவனுக்கு கப்பல் கட்டணத்தை கடனாக செலுத்துவான், ஊதியம் உறையுள் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவான். கப்பலில் செல்லும் ஒப்பந்தக்கூலிகள் பற்றிய பதிவுகள் அரசினால் பேணப்படும். இவை நடைமுறைபடுத்தப்படுவதை கண்காணிக்க ‘பாதுகாவலர்’ (Protector) என்ற அரச அதிகாரி நியமிக்கப்பட்டிருப்பார். ஒப்பந்த காலம் முடிந்ததும் விடுவிக்கப்பட்ட தொழிலாளி மீண்டும் அதே எசமானிடம் வேலைக்குச் சேரலாம் அல்லது வேறு எசமானிடம் செல்லலாம் அல்லது தானே நிலத்தை வாங்கி விவசாயம் செய்யலாம் அல்லது வேறு தொழிலில் ஈடுபடலாம். இந்த முறையை மேலோட்டமாகப்பார்க்கும் போது நல்லதாகத் தோன்றும். ஆனால் யதார்த்தத்தில் அது பழைய அடிமைமுறையின் புதிய வடிவமாகவே இருந்தது. ஆயினும் அவர்கள் ஒப்பந்தக்கால முடிவில் அல்லது இன்னும் பல வருடங்கள் கழித்து தமது விடுதலையைப் பெறக்கூடியதாக இருந்தது. இரண்டாவது வகையிலான நவீன அடிமை முறையோ ஆரம்பத்தில் கண்காணிப்போ கட்டுப்பாடோ இன்றி நடைபெற்றது, காலவரையின்றி தொடர்ந்தது. இன்று ஏனைய நாடுகளில் நவீன அடிமைமுறை ஏதோ ஒரு வகையில் முடிவுக்கு வந்துவிட்டபோதும் இலங்கையில் மாத்திரம் அது தொடர்கிறது. இலங்கையின் நவீன அடிமைத்தனத்தில் இன்னும் இரு முக்கிய அம்சங்கள் இருந்தன; ஏனைய நாடுகளைப் போல பல்வேறு மொழி-கலாச்சாரக் குழுக்களாக அன்றி ஒரே மொழிபேசும் தமிழ் மக்களே இங்கு குடிபெயர்ந்தார்கள். தெலுங்கர் போன்ற சிறிய மொழிக்குழுக்களும் நாளடைவில் இவர்களோடு இரண்டறக்கலந்துவிட்டன. ஏனைய எந்த நாடுகளுக்கும் இந்தியாவிலிருந்து குடி பெயர்ந்த மக்கள் கூட்டத்தை விடவும் இலங்கைக்கு குடிபெயர்ந்த தமிழ் தொழிலார்களது தொகை அதிகமானது. இன்று இத்தொகை வெகுவாக் குறைக்கப்பட்டுவிட்டபோதும் நவீன அடிமைத்தனம் தொடர்கிறது.

அதனை முடிவுக்கு கொண்டுவந்து அவர்கள் சமஉரிமையுள்ள மக்களாக சம அந்தஸ்துடன் வாழ வழி சமைப்பது உண்மையான விடுதலை வேட்கையாளர்களின் கடமையாகும்.

• • •

## தொழில் வளர்ச் ... தொடர்ச்சி ...

செய்துள்ளபோதிலும் யாரும் கவனத்தில் கொள்வதில்லையெனவும் பண்ணையாளர் சங்க தலைவர் சு.நிமலன் தெரிவித்தார்.

தமது பகுதிகளில் யானைகளின் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதற்காக தமது பண்ணைகளை சூழவுள்ள பற்றைகளை வெட்டும்போது அங்குவரும் வனத்துறை அதிகாரிகள் தங்களை கைதுசெய்ய முற்படுவதுடன் அச்சுறுத்துவதாகவும் ஆனால் நூற்றுக்கணக்கானவர்கள் வந்து காடுகளை வெட்டியும் தீவைத்தும் காணிகளை அபகரிக்கும்போது இந்த வனத்துறை அதிகாரிகள் கவனத்தில் கொள்வதில்லையெனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டபோதிலும் இதுவரையில் நடைமுறைப்படுத்தவில்லையெனவும் இதனால் தாம் தொடர்ச்சியாக பாதிக்கப்படுவதாகவும் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் மயிலத்தமடு,மாதவனை பகுதியில் நூற்றுக்கணக்கான சட்ட விரோத காணி அபகரிப்பாளர்கள் அப்பகுதியில் காடுகளை அழித்தும் மேய்ச்சல் தரைகளை தீவைத்து அழித்தும் காணி அபகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றமை குறித்து யாரும் கவனம் செலுத்துவதாக தெரியவில்லை. இன்று அப்பகுதிக்குள் யாரும் செல்லமுடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ள நிலையிலேயே இவ்வாறான அத்துமீறல்கள் நடைபெறுகின்றன. குறிப்பாக மகாவலி அதிகாரசபையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் முழுமையான உதவியுடன் அங்கு காடுகள்அழிக்கப்பட்டும் மேய்ச்சல்தரைகள் தீயிடப்பட்டும் காணிகள் அபகரிக்கப்படுவதை காணமுடிந்தது. மேய்ச்சல் தரை நிலங்கள் எரியூட்டப்படுவதனால் தமது கால்நடைகள் உணவினை பெற்றுக்கொள்ளமுடியாத சூழ்நிலையுள்ளதாகவும் இங்கு பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாறான பிரச்சினைகள் நிறுத்தப்பட்டு எமது வளங்கள் பாதுகாக்கப்படவேண்டுமானால் மிகவும் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கும் திட்டங்களை தடுப்பதற்கு சிறந்த திட்டமிடல் முன்னெடுக்கப்படவேண்டும். இதனை நிறுத்து வதற்கு கிழக்கு மாகாண ஆளுனர் நடாத்திய கூட்டத்தில் குறித்த பகுதிகளில் உள்ள காணிகளை கால்நடை பண்ணையாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு தீர்மானித்திருந்தபோதிலும் அதனை மாவட்ட நிர்வாகம் இதுவரையில் நடைமுறைப்படுத்தாத நிலையே இருந்துவருகின்றது. குறைந்தது இதனையாது நடைமுறைப்படுத்தினால் மேய்ச்சல் தரை பகுதி பாதுகாக்கப்படும் நிலைமையேற்படும்.

அத்துடன் மட்டக்களப்பு கிரான் ஊடாக மைலத்தமடு,மாதவனை வரையான வீதியை செப்பனிட்டு பண்ணையாளர்கள் இலகுவில் போக்குவரத்துச்செய்யும் நிலைமையேற்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் மைலத்தமடு,மாதவனை பகுதியில் கால்நடைகளுக்கான நீர்தேக்கிவைக்கும் குளங்கள் அமைக்கப்படவேண்டும்.

மிகமுக்கியமாக இப்பகுதி பண்ணையாளர்களுக்கு வசதிகள் செய்யப்படுமானால் எதிர்காலத்தில் அதிகளவான பால் பெறப்படும் நிலைமைகள் காணப்படுவதனால் இப்பகுதியில் பால்உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு புலம்பெயர் உறவுகள்முன்வருவார்களானால் அதன் மூலம் இப்பகுதியின் இருப்பினை தமிழர்கள் பாதுக்காக்கமுடியும். சிந்தித்துசெயற்பட முன்வரவேண்டும் என்ற அழைப்பினை இதன்மூலம் முன்வைக்கின்றேன்.

• • •

## ஒரு புதிய ... தொடர்ச்சி ...

இரண்டாம் உலகப் போரின் முடிவில், அதாவதுv 1945ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு புரிதலின் அடிப்படையில், ஐக்கிய நாடுகளின் வீட்டோ அதிகாரம் ஐந்து நாடுகளின் கைகளிலே தான் இருக்கின்றது.

அமெரிக்காவின் தலைமையில் உள்ள உலக ஒழுங்கைப் பார்க்கும் போது, கடந்த சில வருடங்களாக இந்த மாதிரியில் உடைவுகள் ஏற்பட்டு வருகின்றன. பூகோளப் பொருண் மியத்திலும், இராணுவ ஆற்றலிலும் ஒரு பலமான சக்தியாகத் திகழ்கின்ற சீனா, வோஷிங்டனது செல்வாக்கைச் சோதித்துப் பார்க்கிறது. ஈரானிய வெளிவிவகார அமைச்சரான ஹொஸெயின் அமிர்-அப்தொல்லாஹியன் (Hossein Amir-Abdollahian) றியாத்துக்குச் சென்று, அங்கு சவூதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசராக இருக்கின்ற இளவரசர் மொஹமட் பில் சல்மானைச் (Mohammed bin Salman) சந்தித்து மத்திய கிழக்கு நாடுகளில் பாரம்பரிய எதிரிகளாக இருப்பவர்கள் நடுவில், சீனாவின் உதவியுடன் சுமூகமான ஒரு உறவை இந்த நாடுகளுக்கு இடையே ஏற்படுத்த ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்.

2022 இல் உக்ரேன் மீது ரஷ்யா முன்னெடுத்து முழுமூச்சான ஆக்கிரமிப்பு நடவடிக்கையும், அதைத் தொடர்ந்து மேற்குலகின் கண்டனத்தின் மத்தியிலும், மொஸ்கோவுக்கும் பேஜிங்குக்கும் இடையே உறவுகள் நெருக்கமாக வந்ததும், இந்தப் பிளவை மேலும் விரைவாக்கியிருக்கிறது. இதே வேளை, இந்தியா, பிரேசில், தென் ஆபிரிக்கா போன்ற நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக மேற்குலகம் கொண்டுவந்த தடைகளுக்கு தமது ஆதரவைக் கொடுக்காமல் மிகவும் கவனமாகவும் நுட்பமாகவும்காய்களைநகர்த்தியிருக்கின்றன. அது மட்டுமன்றி, இந்தப் போரை நியாயப்படுத்துகின்ற ரஷ்யாவின் செயற்பாட்டிலிருந்தும் அவை விலகியிருக்கின்றன.

உலகின் சில பாகங்களில் குறிப்பாக அண்மையில் நைஜர் (Niger, சாஹேல் (Sahel) போன்ற நாடுகளில் இருந்து மேற்குலகின் தடங்கள் மீளத் திரும்புகின்ற நிகழ்வுகளைத் தொடர்ந்து, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் புதிதாக மேலெழுந்து வருகின்ற ஆசிய சக்தியான இந்தியா போன்ற நாடுகள் உலகப் போருக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட தனித்துருவ ஒழுங்கமைப்பை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்று பலத்த குரலெழுப்பி வருகின்றன.

வோஷிங்டனிலிருந்து பிரிந்து செல்கின்ற இந்த முயற்சியில் ரஷ்யாவும் சீனாவும் முழுமூச்சாக ஈடுபட்டுவருகின்றன. தான் வரையறை செய்த விதிமுறைகளைத் அமெரிக்கா தானே மீறுவதாக இந்த நாடுகள் குற்றஞ்சாட்டுகின்றன.

கடந்த ஜூலை மாதம், சென் பீற்றர்ஸ் பேர்க்கில் (St.Petersberg) ஆபிரிக்க தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுடன் மேற்கொண்ட ஒரு உச்சிமாநாட்டில் உரையாற்றிய புட்டின், இந்த அமெரிக்க எதிர்ப்பை முக்கியமாகக் குறிப்பிட்டது மட்டுமன்றி, நெல்சன் மண்டேலாவை மேற்கோள் காட்டி, காலனியத்தை எதிர்த்த தலைவர்களான கமால் அப்டேல் நாஸர், பற்றிஷ் லுமும்பா ஆகியோரின் பெயர்களையும் குறிப்பிடத் தவறவில்லை.

"ஆபிரிக்காவுக்கு எதிராக இழைக்கப்பட்ட வரலாற்றுத் தவறை சரிசெய்ய வேண்டிய நேரம் இது" என்று ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்றும் ஆபிரிக்க நாடுகளும் அதில் நிரந்தர அங்கத்தவர் உரிமையைப் பெறவேண்டும் என்ற ஆலோசனை பற்றிப் பேசும் போது புட்டின் குறிப்பிட்டதாகச் சொல்லப்படுகிறது.

அடுத்த மாதம் டெல்லி நடத்தவிருக்கும் ஜி20 நாடுகளுக்கிடையேயான உச்சிமாநாட்டில் ஒரு இருக்கையைக் கோருமாறு ஆபிரிக்க ஒன்றியத்தை இந்தியா வலியுறுத்திவருகிறது.

"ஒரு புதிய உலக ஒழுங்கமைப்பைச் செதுக்குவதற்கு நிச்சயமாக இடம் இருக்கிறது" என்று டெல்லியில் அமைந்துள்ள அவதானிகள் ஆய்வு அமைப்பைச் சேர்ந்த விவேக் மிஷ்றா கருத்துத் தெரிவித்தார். இரண்டு காரணிகள் ஒன்றையொன்று சந்திப்பதால் அந்த வாய்ப்பு உருவாகிறது. ஒன்று தனது குரலையும் மற்றும் அதன் அதன் தேவைகளையும் முன்னிறுத்தக்கூடிய நாடுகளையும் தேடுகின்ற தென் பூகோளம். மற்றையது மேற்குலகத்துடன் தாம் ஒத்துப்போக முடியாது என்று உணருகின்ற ரஷ்யாவும் சீனாவும் ஆகும்.

"இது இவ்வாறிருப்பினும் இந்த நேரத்தில் இக்காரணிகள் ஒன்றாகத் தோன்றினாலும் இவை முற்றிலும் வேறுபட்ட இரு காரணிகள் என்ற உண்மை புரிந்துகொள்ளப்படவேண்டும்" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

"தென் பூகோளத்தின் குரலாக, சீனா செயற்படுவதாக இந்தியா கருதவில்லை. தென் பூகோளத்தின் முயற்சிகளுக்குள் மூக்கை நுழைக் கின்ற அபிவிருத்தியடைந்துவிட்ட ஒரு நாட்டைப் போன்றே சீனா செயற்படுவதாகவே இந்தியா கருதுகின்றது."

இதனை விடுத்து, உக்ரேனில் ரஷ்யா தொடுத்திருக்கும் போரும், அதன் காரண மாக சக்தி மற்றும் உணவு விநியோகம் போன்ற வற்றில் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளும் அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளில் பணவீக்கத்தைக் கணிசமான அளவு அதிகரித்திருக்கிறது. எந்த நாடுகளுக்காக மொஸ்கோ குரல் கொடுக் கிறதோ அந்த நாடுகளையே இந்தப் போர் பாதித்துக் கொண்டிருக்கிறது."

இருப்பினும் உக்ரேனில் ரஷ்யா தொடுத்திருக்கும் போருக்கு மேற்குலகம் கொடுக்கும் பதிலடியாக கடுமையான பொருண்மியத் தடைகளை அமுலாக்கி, பூகோள நிதி ஒழுங்கமைப்பிலிருந்து ரஷ்யாவைப் பிரித்தெடுக்கின்ற முயற்சியைப் பார்க்கும் போது, தங்கள் மீதும் அமெரிக்கா இவ்வாறான அதிகாரங்களைப் பிரயோகிக்கக்கூடும் என்றும் புதிதாக பொருண்மியத்தில் மேலெழுந்து வரும் நாடுகள் ஐயம் அடைகின்றன.

**நன்றி: அல்ஜஸீரா**

## காணியுரிமை ... தொடர்ச்சி ...

லயன்களே அதிகமாக காணப்படுகின்றன. மலையகத்தில் காணப்படும் நிலப்பயன்பாடும் காணியுரிமையும் ஒரு இனப்பாரபட்சத்தையே காட்டி நிற்கின்றது என்கிறார் அமரர் லோரன்ஸ். அத்தோடு மலையக மக்களுக்கான காணியுரிமையையும், வீட்டுரிமையையும் நிலை நாட்டவும், அவர்கள் தொடர்ந்து காணி யில்லாத வீடில்லாத சமூகமாக வாழா திருக்க, மலையக தமிழ் மக்களின் காணி மற்றும் வீட்டுரிமை தொடர்பாக ஒரு தேசியக் கொள்கை வகுக்கப்பட வேண்டும். இத்தகைய காணி மற்றும் வீடமைப்புக் கொள்கையில் குறைந்தது 10 தொடக்கம் 20 பேர்ச் காணி ஒரு மலையகக் குடும்பத்திற்கு வழங்கப்பட வேண்டும். தோட்டத் தொழிலாளர்களுக்கு காணியினை பகிர்ந்தளித்து தேயிலை, இறப்பர் காணிகளை சிற்றுரிமையாக்குவதன் மூலம் காணியுரிமையும் வீட்டுரிமையையும் தற் போதுள்ள நிலைமையைக் காட்டிலும் பேண முடியும் என்றும் லோரன்ஸ் ஆலோசனை வழங்கியுள்ளார்.

1994 இல் இலங்கையில் சிற்றுடைமைகளின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 6652 ஆகக் காணப்பட்டது. இக்காலத்தில் 76 ஆயிரத்து 570 எக்டேயர் பரப்பில் தேயிலை பயிர்ச்செய்கை இடம்பெற்றது. தென்மாகாணத்தில் அதிகமாக 101784 சிற்றுடைமைகள் காணப்பட்ட நிலையில் இம்மாகாணத்தில் 33220 எக்டேயர் பரப்பில் தேயிலை பயிர்ச்செய்கை இடம்பெற்றது. இன்று நாடளாவிய ரீதியில் நான்கு இலட்சத்துக்கும் அதிகமான சிற்றுடைமையாளர்கள் காணப் படுவதாக தகவல்கள் வலியுறுத்துகின்றன. தேயிலை உற்பத்தியில் பெருந்தோட்டத்தை பின்தள்ளியுள்ள சிற்றுடைமைகள் இன்று கணிசமாக ஆதிக்கம் செலுத்துகின்றன. இந் நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிற்றுடைமையாளர்களாக மாற்றும் பெறச் செய்தல் வேண்டும் என்ற கோஷங்கள் வலுப் பெற்று வருகின்றன. அத்தோடு கம்பனியி னர் முன்வைத்துள்ள வெளியார் உற்பத்தி முறையானது தொழிலாளர்கள் காணியுரிமை யைப் பெற்றுக் கொள்வதற்கான முதற்படியாகும் என்றும் சிலர் தெரிவித்துள்ளனர்.

தொழிலாளர்களின் காணியுரிமை தேர் தல் காலங்களிலும் வரவுசெலவு திட்ட காலப் பகுதியிலும் பேசுபொருளாகிவரும் நிலையில் இதுவரை ஆனபயன் எதுவுமில்லை. இந் நிலையில் மலையக மக்களுக்கு காணியுரி மைகளை வழங்குவது குறித்த திட்டமிடல் கள் அமைச்சர்களான ரமேஷ் பத்திரண, ஹரின் பெர்ணான்டோ, மனுஷ நாணயக் கார ஆகியோர்களுடன் இணைந்து முன்னெடுக் கப்பட்டு வருவதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்திருக்கின்றார். இந்நிலை யில் அரசாங்கமும் இதற்கு சாதகமான பதிலை வழங்கியுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். இதனை சாத்தியப்படுத்த அனைத்து தரப்பினரும் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு குரல் கொடுக்க வேண்டும். காணியுரிமை மற்றும் வீட்டுரிமை போன்ற விடயங்கள் அவர்கள் வாழ்வில் பல்துறை மறுமலர்ச்சி ஏற்பட வித்திடுவதாக அமையும். மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 ஆவது வருடத்தில் கால்பதித்துள்ள நிலையில் இப் போதாவது அவர்களின் காணியுரிமைக் கனவு நனவாக வேண்டும் என்பதே பலரினதும் எதிர் பார்ப்பாகும்.

• • •

## வலுக்கும் இல ... தொடர்ச்சி ...

இலங்கை வருவது தொடர்பில் சீனா அனுமதியை கோரி நிற்கையில் சிங் இலங்கை வருவது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.

இது தொடர்பில் இந்தியா ஏற்கனவே தனது கவலையை வெளியிட்டுள்ளது.

## இலங்கையில் ... தொடர்ச்சி ...

சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இந்த வருடத்தில் இலங்கையில் இடம் பெற்ற 60 சூட்டு சம்பவங்களில் 36 பேர் கொல்லப்பட்டும், 28 பேர் காயமடைந்தும் உள்ளனர். குறிப்பாக தென்னிலங்கையில் அதிக துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளபோதும், அது தற்போது வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கும் பரவி வருகின்றது.

பெருமளவான சூட்டு சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களினால் நிகழ்த் தப்பட்டுவருவதாகவும், கடந்த ஆண்டை போலவே இந்த ஆண்டும் சூட்டு சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் இலங்கை காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இடம்பெறும் இந்த சம் பவங்கள் வெளிநாடுகளின் முதலீடுகள் மற்றும் சுற்றுலாப்பயணிகளின் வருகை என்பவற்றை பாதிக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

## இஸ்ரேலிய ... தொடர்ச்சி ...

புனித விடுதலை யாத்திரையை எரிக்கரையின் தெற்கில் இருந்து வடக்காக முதல்நாள் புனித விடுதலை யாத்திரை முடிவுற்ற இடம் நோக்கி ஆரம்பித்தனர். முற்றிலும் இளையவர் நிகழ்வாக அமைந்த இந்தப் புனித விடுதலை யாத்திரையில் 1956 முதல் 1983 வரை சிறிலங்கா அரசபயங்கரவாதத்தையும் இன அழிப்பையும் அரச கொள்கையாக வளர்த்தெடுத்த வரலாற்றுப் பதிவுகளும் மக்களின் வாழ்வியல் மறுக்கப்பட்ட வரலாறும், 1983இன் பின் இன்று வரை சிறிலங்கா அரசாங்கம் வெளிப்படையான இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பு மூலம் ஈழத்தமிழர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் நாளாந்த வாழ்வுக்கும் இனங்காணக் கூடிய அச்சம் சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்டு வருவதால் ஈழத்தமிழர்கள் உள்ளக வெளியக இடப்பெயர்வுகள் அடைந்து உலகின் துன்புறும் மனித சமுதாயமாக வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலான அவர்களின் தாயமண்ணாம் ஈழமண்ணிலும் அரசியல் புகலிட வாழ்வில் உலகின் முக்கிய நகரங்களிலும் வாழும் இன்றைய சமகால வரலாற்றைக் காரண காரியத் தொடர்புகளுடன் விளக்கும் கி யூ ஆர் கோர்ட் உடன் கூடிய பிரெஞ்சு மொழித் துண்டு பிரசுரங்களை பிரெஞ்சு மக்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் வழங்கினர்.

புனித விடுதலை யாத்திரையின் இரண்டாம் நாள் முடிவில் ஆற்றில் மரியன்னையின் திருவுருவை எழுந்தருளச் செய்து அன்னையின் முன் சிறிலங்காவின் 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் தமிழீழத்தேச மக்கள் 146000 பேரை கிட்லரை விட மிகமோசமான இனப்படுகொலைகள் மூலம் இல்லாதொழித்த 21ம் நூற்றாண்டின் உலகின் மிகக் கொரூரமான இனப்படுகொலை என்று உலக வரலாறு பதிவுசெய்துள்ள இனஅழிப்பில் பாதிப்புற்ற ஈழத்தமிழ் இளையோர்கள் தாங்களே அந்த இனப்படுகொலைக்கான நேரடிச் சாட்சியங்கள் என்ற வகையில் உலக மக்களுக்குப் பிரான்சின் லூடன்விலேயின் ஏரிக்கரையில் நின்று இசை இயல் நாடக நிகழ்வுகள் மூலம் தமிழிலும் பிரெஞ்சு மொழியிலும் தங்கள் வலிசுமந்த வாழ்வியல் நிகழ்வுகளை எடுத்துரைத்து உண்மையை உறுதிப்படுத்தி அனைத்துலக சட்டங்களை நடைமுறைப்படுத்தி தண்டனை நீதியை இனஅழிப்பைச் செய்தவர்களுக்கு வழங்குமாறும் இனஅழிப்பாலும் வலிந்து காணாமலாக்கப்பட்டதாலும் பாதிப்புற்ற குடும்பங்களுக்குப் பரிகார நீதியை நடைமுறைப் படுத்துமாறும் எடுத்துரைத்து இதனை உரிய முறையில் அணுகுவது உலகநாடுகளதும் உலக அமைப்புக்களதும் கடமை என்பதை வலியுறுத்தினர். நெஞ்சுருகும் உண்மை நிகழ்வுகளைப் மையப் பொருளாகக் கொண்ட அத்தனை படைப்புக்களும் உண்மையின் குரலாக நீதியின் தரிசனமாக அமைந்து உலகமக்களின் நெஞ்சங்களை உருக்கியது. இளையவர்களைப் பாராட்டாத நாக்கேயில்லை எனலாம். இளையவர்களின் கண்களிலும் சொல்லிலும் தெரிந்த உறுதி அவர்கள் உள்ளங்கள் நீதி கிடைக்கும் வரை உறுதியுடன் போராடும் வேகம்கொண்டெழுந்துள்ளமையை உலகுக்குத் தெளிவாக எடுத்துக்காட்டின. "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்னும் வரலாற்று உறுதி தரும் தேசவிடுதலைப் பாடலுடன் ஈழத்தமிழ் மக்களின் புனித விடுதலை யாத்திரை நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு லூர்த்து அன்னையின் மாலை நேர மெழுகுவர்த்திப் பவனியில் கலந்து கொள்ளவதற்காக அனைவரும் லூர்த்து அன்னையின் திருத்தலம் நோக்கி வாகனங்களில் புறப்பட்டனர். பிரான்சில் மீளவும் ஈழமக்களின் விடுதலைப் பயணம் பயங்கரவாதமல்ல பாதுகாப்பான அமைதி வாழ்வுக்கும் வளர்சிசகளுக்குமான இறைமையுடன் கூடிய தங்களின் தன்னாட்சி உரிமையை மீள நிறுவும் புனித யாத்திரை என்ற அடிப்படை உண்மை உலகுக்குத் தெளிவாக்கப்பட்டதுடன் இந்தப் புனித விடுதலைப் பயணத்தில் அனைத்து உலக மக்களையும் ஈழத்தமிழர்களுக்கான அவர்களின் மனிதாயக் கடமையைச் செய்து அவர்களின் நாடுகளையும் அமைப்புக்களையும் ஈழத்தமிழர்களின் வெளியகத் தன்னாட்சி உரிமையை ஏற்று சிறிலங்காவின் இனவழிப்பில் இருந்து அவர்களைப் பாதுகாக்குமாறு பணிவன்பாக வேண்டப்பட்டது.

• • •

## பிரிகோசனின் ... தொடர்ச்சி ...

அன்று செலுத்தவில்லை என்பதுடன், அவர் தலைமறைவாகியுள்ளதும் சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது. எனவே விமானம் நடுவானில் குண்டு வெடிப்பின் மூலம் சிதறடிக்கப்பட்டுள்ளது என்ற கருதையும் மறுக்க முடியாது.

தான் ஆபிரிக்கா நாடுகள் மீதான நடவடிக்கையில் கவனம் செலுத்தப்போவதாக விபத்துக்கு முன்னர் கருத்து தெரிவித்த பிறிகோசன் தெரிவித்திருந்தார். எட்டுக்கு மேற்பட்ட ஆபிரிக்க நாடுகளில் வக்னர் குழு செயற்பட்டுவருகின்றது. அண்மையில் நைகர் பகுதியில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் பின்னனியிலும் வக்னர் குழுவே இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைன் மீது 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையை தொடர்ந்தே வக்னர் குழு இரகசியமாக உருவாக்கப்பட்டது. அதனுடனான தனக்குள்ள தொடர்பை கடந்த வருடமே பிறிகோசன் உறுதிப்படுத்தியிருந்தார். சிரியாவில் இடம்பெற்ற சமர்களில் .2018 ஆம் ஆண்டு இந்த குழுவினர் அமெரிக்க படையினருடன் நேரடி மோதல்களிலும் ஈடுபட்டிருந்தனர். பக்முட் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் மிகவும் சிறப்பாக செயற்பட்ட இந்த குழுவினர் ரஸ்யாவின் ஊழல்மிக்க படை அதிகாரிகளுக்கு எதிராக தாம் நடவடிக்கை எடுக்கப்போவதாக கடந்த ஜூன் மாதம் தெரிவித்து புரட்சி ஒன்றை மேற்கொள்ள முற்பட்டபோது, அதனை தனது முதுகில் குத்தியதாகவே பூட்டீன் விமர்சித்திருந்தார்.

இந்த ஆயுத நடவடிக்கைக்கு பின்னர் இரண்டு மாதங்கள் அமைதியாக இருந்த பிறிகோசன் இந்த வாரம் ஆபிரிக்க நாடு ஒன்றில் இருந்து காணொளி ஒன்றை வெளியிட்டிருந்தார். அங்கு படையினரை சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அதன் பின்னர் செவ்வாய்கிழமை (22) ரஸ்யா திரும்பிய அவர் புதன்கிழமை மரணடைந்துள்ளார்.

இதனிடையே, வக்னர் குழுவுக்கு சொந்தமான மற்றுமொரு விமானம் கடந்த வெள்ளிக்கிழமை (25) மொஸ்கோவில் இருந்து புறப்பட்டு சென்று ஆர்ஜாபைஜானில் தரையிறங்கியுள்ளது. அதில் பயணம் செய்தவர்கள் யார் என்பது குறித்து எந்த தகவல்களும் இல்லை.

அதாவது உக்ரைன் மீதான சிறப்பு படை நடைவடிக்கை என்பது பல திருப்பங்களை கொண்டதாக அடிக்கடி உலகின் கவனத்தை ஈர்த்துவரும்போதும், அதனால் உலக நாடுகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளும் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகின்றது.

• • •

## மத்திய அமெரி ... தொடர்ச்சி ...

தற்போது அதன் இறைமை அனைத்துலக தரத்திற்கு அமைவாக இல்லை என இந்த கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தாய்வானின் இடத் திற்கு தற்போது சீனா நியமிக்கப்பட்டுள்ளது. தாய்வான் சீனாவின் ஒரு மாகாணம் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளதாக தாய்வானை வெளியேற்றும் தீர்மானத்தை கொண்டுவந்த நிக்ரகுவா வாக்கெடுப்பின் போது தெரிவித் துள்ளது.

நிக்கரகூவா, குவந்தமாலா, எல் சல்வடோர், ஹொன்டூஸ், பனாமா மற்றும் டொமினிக்கன் குடியரசு ஆகிய நாடுகள் மத்திய அமெரிக்க நாடுகளின் கூட்டமைப் பில் அங்கம் வகிக்கின்றன.

ஆறு நாடுகள் கொண்ட இந்த கூட்டமைப்பில் உள்ள குவந்தமாலா மட்டுமே தாய்வானுடன் இராஜதந்திர உறவை பேணி வருகின்றது.

ஆனால் சீனாவின் அழுத்தம் காரணமாகவே தாய்வான் வெளியேற்றப் பட்டுள்ளது என தாய்வானின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## சந்திரனின் தென் ... தொடர்ச்சி ...

நாலாவது நாடாக இந்தியாவும் அதில் இணைந்து கொண்டுள்ளது. 75 மில்லியன் டொலர்கள் பெறுமதியில் மிகவும் குறைந்த செலவில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை வெற்றியளித்துள்ளதானது இந்தியாவின் தொழில்நுட்பவளர்ச்சிக்கு மிகப்பெரும் உந்து சக்தியை அளித்துள்ளது.

200 மில்லியன் டொலர்கள் செலவில் ரஸ்யாவினால் அனுப்பப்பட்ட விண்கலம் தென்துருவப் பகுதியில் தரையிறங்கிய போது கடந்த வாரம் வீழ்ந்து நொருங்கி யிருந்தது.

சந்திரனின் தென்துருவப் பகுதியில் நீர் மற்றும் கனிமவளங்கள் இருப்பதாக கருதப்படுவதால் அங்கு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு பல நாடுகள் ஆர்வம் காண் பித்து வருகின்றன.

எதிர்வரும் வருடம் இந்தியாவில் பொதுத்தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் சந்திரனில் மேற்கொள்ளப்பட்ட தரையிறக்கம் தற்போதைய பிரதமர் நரேந்திர மோடியின் செல்வாக்கை உயர்த்தியுள்ளதாக மேற்குலக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## பிரிக்ஸ் கூட்டமை ... தொடர்ச்சி ...

சவால்விடும் அமைப்பாக மாற்றம் பெற்று வருகின்றது.

உலகின் 40 விகிதமானசனத் தொகையையும், உலக பொரு ளாதாரத்தின் 25 விகிதத்தையும் கொண்டுள்ள பிரிக்ஸ் அமைப்பின் விரிவாக்கம் என்பது பொருளாதார ரீதியாக எதிர்காலத்தில் உலகில் வல்லமை மிக்க அமைப்பாக அது மாற்றம் பெறும் சாத்தியங்கள் தென்படுகின்றது.

புதிய நாடுகளான ஆர்ஜன் ரீனா, எகிப்த்து, எதியோப்பியா, ஐக்கிய அரபு இராட்சியம், ஈரான் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடு கள் எதிர்வரும் வருடம் ஜனவரி மாதம் இணைந்து கொள்ளவுள்ளன.

இந்த கூட்டமைப்பில் இணைந்துகொள்வதற்கு 40 நாடுகள் ஆர்வம் காண்பித்துள்ளன. 23 நாடுகள் உத்தியோகபூர்வமாக விண்ணப்பித்துள்ளன. தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற மாநாட்டில் 50 நாடுகளை சேர்ந்த தலைவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

## அமெரிக்க தூது... தொடர்ச்சி ...

தனது ஆழுமையை நிலைநாட்ட முற்பட்டுவரும் இந்தியாவுக்கு இது மிகவும் கசப்பான செய்தியாகவே இருக்கும். வடக்கில் சீனாவின் கை ஓங்குவதும், அமெரிக்காவின் கை ஓங்குவதும் இந்தியாவுக்கு நல்ல செய்தியல்ல.

ஆனால் அனைத்துலக நாடுகளுடன் இணைந்து தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களுடன் நல்லுறவுகளை வளர்த்துக்கொள்வது தமிழ் மக்களுக்கு ஒரு அனுகூலமான விடயமாகும். அதன் மூலம் நாம் ஒரு இறைமையுள்ள இனமாக எம்மை பிரகடனப்படுத்துவதுடன், அனைத்துலக அங்கீகா ரத்தை பெறும் வழிமுறைகளையும் ஏற்படுத்தலாம். அரசியல்வாதிகளை புறம்தள்ளி வரும் வாய்ப்புக்களை பயன்படுத்த நாம் தயாராக வேண்டும்.

நோக்கம் ஒன்று ... தொடர்ச்சி ...

**வழங்குவதற்கும் ஒரு திட்டம் தீட்டிக்கொண்டு வந்திருந்தார்கள். இப்பொழுது அவருடைய ஆட்சி கவிழ்க்கப்பட்டு ரணில் விக்கிரமசிங்க வந்திருக்கின்ற நேரத்தில் அவரை விட மேலும் ஒருபடி போவார் என்பது பலருக்கு தெரிந்த விடையம். ரணில் விக்கிரமசிங்க இந்த பதவிக்கு வந்த பிறகு ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டதா? உங்களுடைய வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் போராட்டத்திற்கு நீதிக்கான வழிகள் ஏதும் பிறப்பதற்கு வாய்ப்பு உண்டா?**

நிச்சயமாக இல்லை. ரணில் வந்ததற்கு பிறகு இன்னம் மோசமாக தந்திரமாக உறவுகளை OMP க்குள் கொண்டு செல்வதற்கும் அந்த மரண சான்றிதழ் வழங்குவதற்கும் தந்திரமான நகர்வுகள் மேற்கொள்ளபடுகின்றன. அதை விட OMP க்கு நாங்கள் பதிவு செய்யாமலே அமைப்புகள் செஞ்சிலுவைச் சங்கங்கத்திடம் நாங்கள் கொடுத்த விபரங்களை தந்திரமாக பெற்று நாங்கள் பதிவு செய்ததாக காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதை விடவும் பல்வேறுபட்ட நகர்வுகளை எமது அமைப்புக்குள்ளும் ஒரு பிரச்சனையை உருவாக்குவதற்கு பல முயற்சிகளை செய்வதனை எம்மால் உணர முடிகிறது. அந்த முயற்சிகள் வெற்றி பெறாது. நாம் சரிசெய்து பயணிக்கிறோம். ஆனால் பல வழிகளில் நெருக்கடிகளை எதிர் கொள்கிறோம். எமது அம்மாக்களை கூட அவர்களது வறுமை நிலையை பயன்படுத்தி அவர்களிடம் சென்று இரண்டு இலட்சம் பணம் தருவதாக கூறுகிறார்கள். அப்போது உண்மையில் கஸ்ரப்பட்டவர்கள் நாங்கள் என்றால் கூட சிந்திப்போம். சாப்பாடு இல்லாமல் எனது பிள்ளை சாப்பாடு இல்லாது ஒரு மாதத்தில் அல்லது ஒரு வருடத்தில் இறக்க போகிறது அதை விட கொஞ்சம் ஊட்டச்சத்து கொடுத்து உயிரை பாதுகாப்போம் என்று நினைக்கிற அம்மாக்கள் கூட இருக்கிறார்கள். சிலவேளை காலம் கடந்து விட்டது வாங்குவோம் என்று ஆசைப்பட்டு போன ஓரிருவருக்கு அந்த பணத்தை கூட வழங்கவில்லை

இரண்டு இலட்சம் தருவதாக பொய் கூறி அவர்களை மூளைச்சலவை செய்து ஏதோ ஒரு பொய் கூறி கையொப்பம் பெற்று விட்டு வெறும் ஆயிரம் ரூபா மாத்திரம் கொடுத்து விடுகிறார்கள். போக்குவரத்து பயண செலவிற்கு என்று இரண்டு இலட்சம் எவருக்கும் கொடுக்கப்படவில்லை என்றால் எவ்வளவு தந்திரமாக முயற்சி எடுக்கிறார்கள். அந்த கோப்புக்களை மூடுவதற்கு அப்படி போன சிலர் மாத்திரமே ஏமாற்றப்பட்டார்கள். அவர்கள் எதிர்பார்க்கவில்லை இவ்வாறு நடக்கும் என்று. எமக்கு இப்படி நடந்து விட்டது என்னசெய்வது என்று அந்த ஒரு சிலரும் எம்மிடம் புலம்புகிறார்கள் .அந்தளவிற்கு ரணில் விக்கிரமசிங்க தந்திரமாக காய்களை நகர்த்திக்கொண்டு இருக்கிறார்.

அதேபோல் பல்வேறு வழிகளில் எமக்கான நெருக்கடிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். புலனாய்வு பிரிவினர்களாக இருந்தாலும் சரி உங்களுக்கு தெரிந்திருக்கும் இவர் ஜனாதிபதியாக வந்ததற்கு பிற்பாடுதான் எம்மீது நீர் தாரை பிரியோகங்கள் தாக்குதல்கள் எல்லாம் நிகழ்ந்தது. ரணில் ஜனாதிபதியாக வந்ததற்கு பிறகுதான் அனைத்து வழிகளிலும் நெருக்கடிகளை முன்னெடுக்கின்றார். எமது பாசங்களால் தாக்கு பிடிப்போம். எம்மால் இயன்றவரை தாக்குப் பிடிப்போம்.

**நம்பிக்கையை இழந்த விடாதீர்கள். எங்கோ ஒரு இடத்தில் மாற்றம் வரும். அந்த மாற்றத்தின் ஊடாக உங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. இப்போது ஒன்று மட்டும் தெரிகிறது ஈழத்தமிழருடைய பிரச்சனை தமிழ் மக்களுடைய அந்த இலக்கு இது தொடர்பாக ஒரு உயிர்ப்போடு சர்வதேச பரப்பில் தமிழ் என்று ஒரு இனம் அந்த இனத்தின் மேல் இனவழிப்பு நடந்தது அதற்கு நீதி கோரி போராட்டம் நடாத்திக் கொண்டிருப்பவர்கள் தான் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள். போராட்டத்தை இன்னும் உயிர்ப்போடு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இந்த போராட்டம் வலிமை பெற்றிருக்கிறது ஐநாவில் கூட பேசி இருக்கிறார்கள். இந்த நேரத்தில் அதை நீர்த்து போக வைப்பதற்கு பல முயற்சிகள் சதிகள் எல்லாம் நடை பெறுகின்றது. கனதியான இந்தப் போராட்டத்தில் எத்தனையோ பேரை நீங்கள் இழந்து விட்டீர்கள். இதை பிரிக்கப் பார்க்கிறார்கள். அல்லது நீத்து போக வைக்கிறார்கள். உங்களோடு போராடுகிறவர்கள் எவ்வாறு உணர்கிறார்கள்?**

உண்மையில் எம்மோடு போராடுபவர்களுக்கு இதுகுறித்து மிகுந்த கவலை இருக்கிறது. ஏன் என்றால் புலம்பெயர் தேசத்தில் இருக்கும் அமைப்புக்கள் இதற்குள் வருவதற்கோ அல்லது தங்களுடைய அமைப்பிற்குள் எடுப்பதற்கு பல முயற்சிகள் நடந்திருக்கிறது. அந்தநாட்களில் இருந்து நடந்திருக்கிறது. பல இடங்களில் தலையிட்டு அவ்வாறான நுளைதலை தடுத்திருக்கிறோம். எங்கள் கூட்டம் நடைபெறும் பொழுது கூட வேறு யாரையும் அனுமதிப்பதும் இல்லை. நாங்கள் ஒரு தூதரகத்தில் சந்தித்து கொண்டிருந்தோம். வழமையாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மாத்திரம் தான் தூதரக அதிகாரிகளை சந்திப்போம். ஆனால் இம்முறை சந்திக்கின்ற போது ஒரு அரசியல் பிரமுகர் வேறு நபர்கள் என பங்குபற்றி இருந்தனர்.

அதன்போது அந்த அதிகாரியிடம் சுட்டிக்காட்டி இருந்தோம். வழமையாக எமது அமைப்பின் உறுப்பினர்கள் மாத்திரம்தான் சந்திப்பதாக. அதன் பின்னர் தான் அவர்கள் அறிந்து கொண்டார்கள் சம்மந்தப்படாதவர்கள் உள்ளதை. ஆனால் அதன் பிறகு அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்களையும் அனுமதித்து அவர்கள் வருவதற்கான அழைப்பிதழையும் கொடுத்து விட்டார்கள். எம்மால் உணர முடிகிறது இவைகள் எல்லாம் பிளவு ஏற்படுத்துவதற்கான அறிகுறிகள் என.

எங்களை போன்றவர்கள் இதனை பற்றி கவலைப் பட்டுக்கொண்டிருக்கின்றோம். அதனை எப்படி தீர்க்கப் போகிறோம் என்று புரியவில்லை. முயற்சிகள் நடந்து கொண்டிருக்கிறது பார்ப்போம்.

**எதிர் வரும் முப்பதாம் திகதி மட்டக்களப்பில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் இணைந்து போராட்டத்தை நடத்த இருக்கிறீர்கள். மட்டக்களப்பில் P2P இயக்கத்தினருடைய ஆதரவும் உங்களுக்கு நிறைய இருக்கிறது என்று அறியக்கூடியதாக இருக்கிறது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் பல்கலைக்கழக மாணவர்கள் என்னவிதமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு முன் வந்திருக்கிறார்கள்? ?**

மட்டக்களப்பு மாவட்டத்தில் போராட்டம் நடைபெற இருப்பதால் மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியங்கள் எம்முடன் இணைந்து சிறந்த முறையில் ஏற்பாடு களை ஒழுங்கமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இம்முறை ஒரு வித்தியாசமான முறையில் இந்த போராட்டத்தை முன்னெடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது. அதேபோல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்புபோல் இல்லை எங்கு சென்றாலும் போராட்டங்களில் பங்கெடுக்கிறார்கள்.

இதில் ஒன்றை குறிப்பிட வேண்டும் முன்பு போல் இல்லை ஒருவர் வடக்கும் ஒருவர் தெற்கும் பார்த்த காலங்களை விட தற்போது இந்த ரணில் அரசாங்கத்தால் ஏற்படும் கடும் நெருக்கடி காரணமாகவோ என்னவோ தற்போது ஒரு சில ஒற்றுமைகளை கண்டு மகிழ்ச்சியாக உள்ளது எங்களுக்கு. ஏன் என்றால் வேறுபாடின்றி அநியாயம் நடைபெறும் போது காணிப்பிரச்சனை வந்தபோதெல்லாம் அனைத்து கட்சிகளும் ஒன்றாக இணைந்து நின்றது உண்மையில் இதனை பாக்கும் போது நம்பிக்கை பிறக்கிறது

சில கருமங்களுக்காவது ஒன்றுபட்டு நிற்கிறார்கள். இவை தொடர வேண்டும் இதனை விட பலமடைந்து எங்களுக்கான அரசியல் தீர்வு எங்களுக்கான விடுதலை எமக்கு நடக்கும் அக்கிரமங்கள் எல்லாத்திலும் பலமுடன் ஒற்றுமையாக இருப்பார்களாக இருந்தால் ரணில் அரசாங்கத்தால் எதையும் செய்ய முடியாது. உண்மையில் எமது ஒற்றுமை அனைத்திலும் இருக்க வேண்டும்.

**நிறைவாக வருகின்ற முப்பதாம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தினம். இந்த தினத்தில் போராட்டம் நடத்த போகின்றீர்கள். புலத்தில் வாழுகின்ற மக்களுக்கும் மண்ணில் வாழுகின்ற எங்களுடைய மக்களுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் என்னவிதமான செய்தியை கூற விரும்புகிறீர்கள்?**

உண்மையில் ஒரு வீட்டில் இருக்கிற ஐந்து பிள்ளைகள் என்றால் சிலவேளைகளில் அவர்களிடையே சிறு சண்டைகள் வரலாம். நாங்கள் ஒரு பொது எதிரியை சந்திக்கின்ற போது எங்களுடைய வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையுடன் அந்த பொது எதிரியை நோக்கவேண்டும். அது காணாமல் ஆக்கப்பட்ட போராட்டங்களிலும் சரி அரசியல் தேர்விலும் சரி அந்த ஒற்றுமையே பலம். அதேபோல் சர்வதேசத்தில் இருக்கும் பல்வேறுபட்ட அமைப்புகள் அது எந்தவிதமான அமைப்புக்களாக இருந்தாலும் சரி எந்த துறையிலும் சரி ஒன்றோடு ஒன்று பிளவுபட்டு பிரிந்து செல்வது ஏன் என்று புரியவில்லை. ஆனால் நோக்கம் ஒன்று அதற்காக முடிந்தவர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி செயற்பட வேண்டும். தமிழரது கோரிக்கை ஒன்று தாயகத்தில் இருக்கின்ற மக்களுக்கான விடிவு நிம்மதியான வாழ்க்கை. எல்லோரும் அதைத்தான் தேடுகிறார்கள் அதனை ஒற்றுமையாக நின்று வேறுபட்ட அமைப்பாக இருந்தாலும் ஒற்றுமையாக நின்று அவர்கள் போராடவேண்டும். அதே நேரம் எங்களையும் ஒற்றுமைப்படுத்தி எங்களையும் பலமடைய செய்யவேண்டும் என்பதுதான் எமது கோரிக்கையாக உள்ளது.

• • •

எதிர்ப்புக்களை ... தொடர்ச்சி ...

வழங்கியுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அணுசக்தி அமைப்பு, நீர் கடலில் கலப்பதை பார்வையிட்டதுடன், நீர் மற்றும் மீன் மாதிரிகளை பரிசோதனைக்காக எடுத்துச் சென்றுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு எதிராக முறைப்பாட்டை மேற்கொண்டுள்ள சீனா, இது ஒரு சுயநல நடவடிக்கை எனவும் தெரிவித்துள்ளது.